பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

# The EELA NADU

மலர்: 19 சித்திரை 14 ஜா அல்: 6 இதழ்: 74
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-4-77

# கூட்டணி மேதினக் குழுவில் அவநம்பிக்கைத் தீர்மானம்?

கொழும்பு, திங்.

வவுனியா எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு தலைமையிலான தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணிமீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவர முஸ்தீபுகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

மேதின ஊர்வலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கங்களையும் இவ்வூர்வலத்தில்சேர்க்கக் கூடாது என்று கூறிய தொழிற்சங்க கூட்டணி செயலாளர் திரு. சம்பந்தர் இப்போது திடீர் மாற்றம் அடைந்தது வருத்தத்தைத தருகிறது. தொழிற்சங்கக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## சிரிப்புச் சொட்டு



ஒருவர்: பெரும் தலைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு திசையாப் போறதென்ன?

மற்றவர்: அது செம்மறி ஆட்டின் தத்துவம் என்று வெட்கப்படுகிறார்கள் போல.

சுந்தர்

# "ஏகாதிபத்தியத்தை சேர்ந்து எதிர்ப்போம்!"

## லெனின் நினைவு விழாவில் அமிர்தலிங்கம் உறுதி

யாழ்ப்பாணம், செவ்வாய்

"[illegible] தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதை தமிழ்த் தேசிய இனம்சார்பில் [illegible] வரவேற்று பாராட்டுகிறேன். இந்த லட்சியத்தோடு செல்லும்போது நிச்சயமாக நாம் ஏகாதிபத்தியவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் முற்போக்குச் சோஷலிச சமுதாயத்தை அமைக்கும் நடவடிக்கைகளில் கைகோர்த்துச் செல்வோம்"

யாழ். மத்திய கல்லூரிமண்டபத்தில் நடந்த லெனினின் 107-வது நினைவு தினத்தில் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர் திரு.அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைச் சோஷலிஸ நட்புறவுச்சங்க யாழ்.கிளை துணைத் தலைவர் திரு. அ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: கடந்தகாலத்தில் பொருளாதாரக் கருத்துக்கள் எங்களுக்குள் வித்தியாசமாக இருந்தாலும், அரசியல் நிர்ணயசபையில் சமர்ப்பித்த யாப்பு, பரிபூரணமான சோஷலிச அமைப்பு வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

காணி உச்சவரம்பு சட்டம் கொண்டுவந்தநேரத்தில் சகல செல்வத்திற்கும் உச்சவரம்பு வேண்டுமென வலியுறுத்தினோம்.

லெனின் அரசியல் சந்தர்ப்பத்திற்கு இடம் கொடுக்கவில்லை. நான் சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக வளைந்து நெளிந்து கொடுத்து விலாங்குபோல வாழவிரும்பவில்லை. லெனினும் அப்படித்தான் வாழ்ந்தார். தனக்கென்ற கொள்கையிலிருந்து விலகவில்லை.

நேரத்திற்கு ஒரு கொள்கை, காலத்திற்கு ஒருவேஷம். இது அரசியல்இல்லை. சமுதாயத்தை முன்வைத்து உலகின் வழிகாட்டியாக வாழ்ந்தார்.

உலக சோஷலிச நாடுகள் அரங்கில் தமிழ் ஈழம் உரிமை பெற்று வாழும்நாளை எதிர்நோக்கிச்செல்கின்றோம்.

யாழ். மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் கூறியதாவது: நாம் இந்த நாட்டிலே மே தினத்திற்காகவோ, தேர்தல் தொடர்பாகவோ சிந்திக்கவில்லை. நீண்ட நெடுங்காலம் வாழ்கின்ற நாம், இறைமை பெற்றவர்கள். பாரம்பரியமான தாயகத்தை ஆளும் உரிமை பெற்றவர்கள், சுயநிர்ணய உரிமையுடன், விரும்பினால் பிரிந்துபோகும் உரிமையுடன் வாழவேண்டும்.

விவாகரத்துச்சட்டம்உண்டு. அதனை எம். பிக்களே ஆட்சிமன்றத்தில் உருவாக்கினார்கள். தாங்கள் பிரிந்துபோகும் எனக் கருதியிருந்தால் அதை உருவாக்கியிருக்கமாட்டார்கள். விவாகரத்துச் சட்டமிருப்பதால், நாட்டிலுள்ள அத்தனை குடும்பங்களுக்கும் பிரிந்து செல்வதென்ற கருத்தில் அவசியம் ஏற்படும்போது, விவாகரத்து சட்டத்தை நாடலாம். இதேபோலத்தான் [illegible] சபை உரிமையும்.

முழுத்தேசத்தையும் நேசிப்பவர்கள், சேர்ந்துவாழும் இடமிருந்தால் சேர்ந்து வாழும் நிலைமையை உருவாக்கவேண்டும்.

மாவை சேனாதிராசா பேசும்போது கூறியதாவது; சிறையில் இருந்தகாலத்தில் நானும் காசி ஆனந்தனும் சமதர்மப்பாதையைச் சிந்தித்துப் பார்த்தோம். வடக்கில் சிங்கள மக்களுடன் தொடர்புள்ள திரு. பொன்னம்பலத்தைச் சந்தித்து இது பற்றிப் பேசவிருந்தோம். அதற்கு வாய்ப்புக் கிடைக்குமுன்னரே திரு. பொன்னம்பலம் தமது நிலைமையைத் தெளிவாக்கிவிட்டார். எமது லட்சியத்தை முன்வைத்துச் சேர்ந்து போராட வாய்ப்பு இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்ஈழம் அமையுமானால் அது சிவப்பு ஈழமாகத்தான் இருக்கும்.

நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசும்போது எங்கள் நாட்டிற்கு லெனின் கொள்கை தத்துவம் தேவைப்படுவதாகக் கூறினார். தொழிலாளர் தலைமையில், பொதுமக்கள்சேர்ந்து நடத்திய போராட்டங்கள் வெற்றியளித்துள்ளதாகவும் கூறினார்.

(க)

## நல்லூர்த் தொகுதி பிறருக்கு இல்லை

நல்லூர்த் தொகுதியிலுள்ள பத்து சனசமூகநிலையங்களைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டியொன்று நேற்று முன்தினம் திரு. ஆர். விசுவநாதனின் வீட்டின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்து 'நல்லூர்த் தொகுதி நல்லூரானுக்கே' இறக்குமதிச் சரக்கு வேண்டாம்'' 'உள்ளூர் உற்பத்தியே வேண்டும்' என்ற சுலோகங்களை இந்தக் கோஷ்டி கோஷித்தது.

திரு. விசுவநாதன் அச்சமயம் வீட்டிலிருக்கவில்லை.

வேட்பாளரை நிறுத்தி வாக்குக்கேட்க வரவேண்டாமென்றும் நூரத்தப்பட்டவர்களுக்கு நல்லூர்த் தொகுதி இடம்தராதென்றும் திரு.விசுவநாதனின் மகனிடம் தெரிவித்துவிட்டு அந்தக்கோஷ்டி சென்றது.

### ஆலாலுக்கு ஆதரவு

நல்லூர்த் தொகுதியில் திரு. மு. ஆலாலசுந்தரத்தையே

(8 ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்.

கொழும்பு, திங்.

தியத்தலாவையில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் [illegible] 612-வது தேசிய சுவீப் பின் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:

**49 O 0937**

1 லட்சம் ரூபா

2-வது பரிசு:

**22 X 0639**

40,000 ரூபா

3 வது பரிசு:

**32 A 0282**

10,000 ரூபா

தலா 1000 ரூபா பரிசு பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 21 A 0031 | 26 A 0620 |
| 09 B 0120 | 03 B 0367 |
| 42 B 0399 | 46 B 0305 |
| 01 C 0202 | 13 C 0415 |
| 19 C 0970 | 03 D 0808 |
| 19 D 0350 | 22 D 0988 |
| 25 D 0352 | 35 D 0102 |
| 37 D 0283 | 38 D 0920 |
| 21 E 0823 | 24 E 0193 |
| 36 E 0575 | 41 E 0348 |
| 41 E 0677 | 43 E 0306 |
| 06 F 0344 | 07 F 0289 |
| 08 F 0030 | 09 F 0183 |
| 23 F 0279 | 25 F 0840 |
| 27 G 0415 | 13 H 0070 |
| 20 H 0047 | 20 H 0253 |
| 34 H 0687 | 46 H 0423 |

(8-ம் பக்கம் பார்க்க)

## "இளைஞர்கள் தேர்தலில் சக்தியைவிடக் கூடாது"

— சத்தியசீலன்

கல்வியங்காடு, திங்கள்

"தமிழ் இளைஞர்கள் இனத்தின் விடுதலையைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமேயொழிய, தேர்தலில் தமது சக்தியைச் செலவழிக்கவேண்டாம்" என்று பீசாலை மக்கள் முன்னேற்ற மண்டபத்தில் திரு. கோடீஸ்வரன் தலைமையில் நடந்த தமிழ் இளைஞர் பேரவைக் கருத்தரங்கில் பொன். சத்தியசீலன் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது: "பாராளுமன்ற ஜனநாயகம் நடக்கின்ற ஒரு நாட்டில் தேர்தல்கள் வரும் போகும். பாராளுமன்றக் கதிரைகளை நிரப்புவதால் இனத்தின் விடுதலை கிடைத்துவிடாது. பாராளுமன்றம் ஒரு பேச்சு மேடையாக இருக்குமேயன்றி, விடுதலையைப் பெற்றுத்தரும் களமாக அது இருக்கமாட்டாது.

"தமிழ் இளைஞர்கள் இனியும் தேர்தலைப் பற்றிச் சிந்திப்பார்களேயானால் எமது விடுதலை மேலும் பல காலம்

(-8ம் பக்கம் பார்க்க)

# கூட்டணி வேட்பாளர் பல இடங்களில் பிரச்னை

## கூட்டணி அலுவலகம்முன் சத்தியாக்கிரகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் தெரிவு சில தொகுதிகளுக்கே முடிவடைந்திருந்தாலும், அந்தத் தொகுதிகள் பலவற்றிலுமே இப்போது பெரும் பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன. திருக்கோணமலைத் தொகுதியில் இன்னும் கொதிப்படங்கவில்லை.

பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர் சிலர் நேற்று தமிழர் விடுதலைக்கூட்டணிக் காரியாலயத்துக்குமுன்னால் சில மணிநேரம் சத்தியாக்கிரகம் செய்தனர்.

அவர்கள் கொண்டுவந்திருந்த சுலோக அட்டைகளில்

8-ம் பக்கம் பார்க்க

# தந்தைதாயைகண்டித்ததால் மகள் ,தற்கொலை

சாவகச்சேரி, திங்கள் தகப்பன் தாயை கண்டித்து தடியால் அடித்ததை சகிக்காத இளம்பெண் ஒருவர் கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் சாவகச்சேரியைச் சேர்ந்த மீசாலை வடக்கின் நடைபெற்றது.

ஐயாத்துரை கமலாம்பிகை [வயது 23] என்னும் இளம் பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்தவராவார்.

சந்தையிலிருந்து வந்த தந்தை தாயை நோக்கி மாட்டுக்கொட்டகையை துப்புரவு செய்யவில்லை என்று கண்டித்து பின்ஏற்பட்டவாக்குவாதத்தை அடுத்து தந்தை ஒருதடியால் தாய்க்கு அடித்ததாகவும் இதைப் பார்த்துக்கொண்டு நின்றமகள் சகிக்கமுடியாது கைக்கோல் கொட்டிலுக்கு சென்று அங்கிருந்த நச்சுத்திராவகத்தை எடுத்துப் பருகினார் என்றும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவர் அங்கு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் மரணவிசாரணைசெய்து தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். [இ]

......

## நா.பார்த்தசாரதி ராஜிஞமா!

சென்னை, ஏப். 25

பிரபல தமிழ் எழுத்தாளரான நா. பார்த்தசாரதி காங்கிரஸ்கட்சியிலிருந்து விலகி ஜனநாயக காங்கிரஸ்கட்சியில் சேர்ந்துள்ளார்.

ஜனநாயக காங்கிரஸ்கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர் திரு. ஏ. ஜெயராமன் இத் தகவலைத் தெரிவித்தார்.

முன்னாள் காங்கிரஸ் எம்.பி. திரு. பூவராசசாமி, முன்னாள் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் திரு.ராமசாமிகவுண்டர் ஆகியோரும் காங்கிரஸிலிருந்து விலகி ஜனநாயகக்காங்கிரஸில் இணைந்துள்ளனர். (இ)


## கேள்வி விளம்பரம்

1977ம் ஆண்டு வைகாசி மாதம் பதினொராந் திகதி (11-5-77) புதன்கிழமைகாலை 9-30 மணிவரையும் வட்டுக்கோட்டைக் கிராமசபை அக்கிராசனரால் கொந்தராத்துக்காரரிடமிருந்து கீழ்க்குறிக்கப்படும் வேலைகளுக்கு சீல்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 10-5-77ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஒவ்வொருவேலைக்கும் ரெண்டர்ப் பணமாக தலா ரூபா 25உம் ஒவ்வொரு வேலைக்குரிய ரெண்டர்ப் பத்திரப்பணமாக தலா ரூபா12உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரில் [illegible] நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

### வேலைகளின் பெயர்

1. இருத்தலடிவீதி (பகுதி)
2. தாவளை வீதி.
3. சிவன்கோவிலடி வீதி.
4. அடைக்கலந்தோட்டம்-சங்கரத்தை வட்டுக்கோட்டை வீதி.

நா- அமிர்தலிங்கம்,
தலைவர்,
கிராமசபை,
வட்டுக்கோட்டை.

கிராமசபை - அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
21-4-77. 9593



## தேவை

இரவில் பத்திரிகை மடிக்கவும், காலையில் பத்திரிகை விநியோகம் செய்யவும் பையன்கள் தேவை. சொந்தச் சயிக்கிள் வைத்திருப்பவர்கள், கிராமசேவகரின் நற்சான்றிதழுடன் 29-4-77 வெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்கு நேரில்வரவும். யாழ் மாநகரசபை எல்லைக்குள்வசிப்பவர்களுக்கு மட்டும் நியமனம் வழங்கப்படும்.

நிர்வாகி, ஈழநாடு,
யாழ்ப்பாணம், 6017



## சிந்தெட்டிக் கற்பூரம்
### பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர்ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516 ஸ்கின்னர்ஸ் றேட்டுத்தெற்கு
கொழும்பு-10
போன்: 24261-5



## கேள்வி விளம்பரம்

மானிப்பாய்க் கிராம சபை விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் றேட்டு வேலைக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1977-05-10-ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ள கேள்விப் பிணைப்பணமும் பத்திரக்கிரயமும் செலுத்தி 1977-05-10-ந் திகதி நண்பகல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். எவ்வித கேள்வியையும் நிராகரிக்க விசேட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. மேலதிக விபரங்களை விசேட ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

கீழ்க் குறிப்பிட்ட றேட்டு வேலையை 20-06-1977-ந் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கி பாரம் கொடுப்பவர் மட்டும் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

| கேள்வி விபரம் | பத்திரக் கிரயம் | கேள்விப் பிணை |
|---|---|---|
| சீனித் தொழிற்சாலை வீதி, சண்டிலிப்பாய் | 10/- | 50/- |

ஒப்பம்
சி. கே. இலங்கராஜா,
விசேட ஆணையாளர்,
மானிப்பாய்க் கிராம சபை,
ஆனைக்கோட்டை,

6015


# வீரசைவக் குருக்கள் 75-வது ஆண்டு பூர்த்திவிழா

வீரசைவக்குரு சிவஸ்ரீ சி. ஐயம்பிள்ளை குருக்களின் 75-வது ஆண்டு பூர்த்திவைரவிழா கடந்த 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறை குரக்கன்துறை ஸ்ரீவீரபத்திர தருசுவாமி ஆலயத்தில் மிகச் சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. பின் 22-ம் திகதி வெள்ளிக்கிழமை அளவையூர் மக்களாலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பெங்களூரிலிருந்து வருகை தந்துள்ள குருதாருகாச்சிரம மகாகுரு அந்தர்யோதிசி வேதமூர்த்தி வீரய்யசுவாமிஜியும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அன்று அளவையூர் ஹரிகரன் (ஐயனார்) ஆலயத்திலிருந்து வீரசைவ குருமகாசந்நிதானமும் அந்தர் ஜோதிரி வீரய்யசுவாமிஜிகளும் மங்கல வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அளவையூர் மகாமாரி அம்பாள் ஆயத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்கள். அங்கு அளவையூர் திரு. செ. கதிரேசபிள்ளை ஆசிரியரின் தலைமையின்கீழ் விழாக் கூட்டம் ஆரம்பமாகியது. விழா ஆரம்பத்திலே தலைவர் அவர்கள் குருமகாசந்நிதானத்தில் பாரதநாட்டிலிருந்து வருகைதந்துள்ள சுவாமிஜியையும் வரவேற்றும்வீரசைவசமய சமத்தின் தனிச் சிறப்புப்பற்றியும் [illegible] இவ்விழாவில் அளவையூர் மக்கள் [illegible] தலைவர்களுக்கு பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

இவ்விழாவில் காங்கேசன்துறை வைர விழாச் சபைச் செயலாளர் திரு. வ. குமாரசாமி, உரும்பராய் இந்துக்கல்லூரி இளைப்பாறிய கனிட்ட அதிபர் சிவஸ்ரீ இ. நவரத்தினக் குருக்கள் சுவாமிஜி, அளவையூர் இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் திரு. ந. தம்பிப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

இவ்விழாவில் சொற்பொழிவாற்றிய திரு. வ. குமாரசாமி, வீரசைவமதம் சிவசிருஷ்டிகளான பஞ்சாசாரியர்களினால் தோற்றுவிக்கப்பட்ட மிக மிகப் பழமைவாய்ந்தசமயமெனவும், அனுதிகாலத்தில் ஈழநாட்டிலும் பாரத பூமியிலும் மிகச் சிறப்புற்றோங்கி நாளடையில் காலமாற்றங்களினாலும் சந்தர்ப்பசூழ்நிலைகளினாலும் இம்மதம் அருகிவந்துள்ளதெனவும்இம்மதத்தைப் புனருத்தாரணஞ்செய்து ஈழநாடுமுழுவதும் முன்போல் சிறப்புடன் விளங்கவைக்க வேண்டுமெனவும் இச்சமய வளர்ச்சிக்காக ஊர்கள் தோறும் பல வீர சைவ மகாசபைகளை ஸ்தாபிக்கவேண்டுமெனவும் கூறினர். சிவஸ்ரீ இ. நவரத்தினக்குருக்களும் பேசினர்.

அந்தர் ஜோதி சி. வீரய்ய சுவாமிஜி வீரசைவமும் இலிங்க வழிபாடும் என்னும் பொருள் பற்றி பேசுகையில், வீரசைவர்களுக்குச் சிவலிங்க வழிபாடு இன்றியமையாததொன்றுமெனவும் சிவலிங்கதாரணம் செய்துவைக்கும் குருமார்களைச் சிவமாக மதித்து அவர்களைப் பூஜிக்கவேண்டுமெனவும் சொற்பெருக்காற்றினர்கள்.

சுவாமிஜி சிவனொளிபாதம், காதிர்காமம் ஆகிய புனித ஸ்தலங்களைத்தரிசித்த பின்னர் 28-ம் திகதி வியாழக்கிழமை காங்கேசன்துறை குரக்கன் துறை ஸ்ரீ வீரபத்திர குரு சுவாமி கோயிலில் நடைபெறும் வரவேற்பு விழாவில் கலந்துகொண்டபின் மறுநாள் 29-ந் தேதி வெள்ளிக்கிழமை தாயகம் புறப்படவுள்ளார்கள்.

# கையில் வாளுடன் நின்றுர்: ஒரு மாதம்கடூழியம்

கல்வியங்காடு, திங்கள் கையில் வாளுடன் நின்ற ஒருவருக்கு யாழ்,நீதிமன்ற நீதிபதி ஒருமாதக்கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

பட்டப்பகலில் கையில் வாளுடன் நின்ற இளைஞர் ஒருவரைக் கண்ட யாழ்ப்பாணக் குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி திரு. ரி. தாமோதரம்பிள்ளை அவ்விளைஞரைக் கைதுசெய்தார். நேற்று நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் எதிரியான கொட்டடியைச் சேர்ந்த நடேசு யோகராசா தான் கையில் வாள் வைத்திருக்கவில்லை என வாதாடினா எனினும் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் எதிரிக்கு ஒருமாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். இவர் வேறு ஒரு வழக்குத் தொடர்பாக தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதிபதியை பார்க்கச் சென்றவர் பாதுகாப்பில்

கல்வியங்காடு, திங்கள் நீதிபதியைப் பார்க்க விரும்பிய ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று யாழ்ப்பாணநீதிமன்றத்தில் இடம் பெற்றது. யாழ்ப்பாண மாநகரசபைக் காவலாளியான நடராசா என்பவர் கோர்ட் சார்ஜன் அன்ரனைப் பயமுறுத்தித் தான் நீதிபதியைப் பார்க்க வேண்டும் என்று கூறியதாகவும் அவர் மதுபோதையில் இருந்ததாகவும்அவரைஉள்ளே செல்ல அனுமதிக்கத் தடுத்து அவரை வெளியேற்றினர். வெளியே சென்ற அவர் சிறிது நேரத்தில் மீண்டும்வந்து சார்ஜனைப்பயமுறுத்தவே அவரைக் கைதுசெய்த பொலிசார் பாதுகாப்பில்வைத்துள்ளனர்.

# ‘பழைய கூத்துக்களில்புதிய கருத்துக்களைப் புகுத்த வேண்டும்’

## அரசாங்க அதிபர் கருத்து

வண்ணார்பண்ணை, திங்கள் ‘‘எமது நாட்டின் பழைய புராதன கலைகள் எமது வாழ்க்கைக்குத் தேவையானவைகளாக அமைகின்றன. ஆனால் அவற்றைக் கையாளும் முறைகளை நாம் புதிப்பிக்க வேண்டும் என்பதை நாம் [illegible] க்கவேண்டியநிலையும் இருக்கின்றது. மக்கள் ரசிக்கும் தன்மையுடன் தான் கலைகளை மக்கள் முன்புகுத்தி கருத்துக்களை, பண்டைய சரித்திரங்களை கலாச்சாரங்களை பாதுகாக்க முடியும்’’

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க செயலக கலாச்சாரப் பிரிவினுல் நடத்தப்பட்ட புத்தாண்டு கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபால தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இவ்விழாவில் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், மகாபாரதம் போன்ற பழைய இலக்கியச் சுவையுள்ள சரித்திரங்களை எமது நாட்டு மன்னர்களின் சரித்திரங்களை எளிய முறையில் மக்கள் அறிய பழைய நாட்டுக்கூத்து முறைகள் பயன்படுகின்றன. வட இலங்கையில் நாட்டுக்கூத்துக்கள் இருப்பது போல் தென்னிலங்கையிலும் இருக்கின்றன. அப்படியான பழைய முறைகளில் புதிய கருத்துக்களையும் நாம் மக்கள் முன் கொண்டுவர வேண்டும். பழம் கலைகளுக்கு மக்கள் ஊக்கம் கொடுக்க முன்வரவேண்டும் என்றுர்.

யாழ். மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர்திருமதி. எஸ். தியாகராசா நன்றியுரை நிகழ்த்தினர். திருமதி விஜயபால பரிசில்கள் வழங்கினர்.

1976-ம் ஆண்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட நாட்டுக்கூத்து போட்டிகளில் பரிசுகள் பெற்ற நாட்டுக்கூத்துக்களுக்கு இவ்விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

யாழ். நவரச நாட்டுக்கூத்து கலாமன்றத்தின் ‘சங்கிலியன்’ கூத்து முதல் ரூ 300 பரிசையும், வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவின் ‘சடாசுரன்வதை’ கூத்து இரண்டாவது ரூ 200 பரிசையும், பாஷையூர் நவன் தேசிய கலாமன்றத்தின் ‘வீரபாண்டிய கட்டப்பொம்மன்’ மூன்றுவது 100 ரூபாபரிசையும் பெற்றன.

பாஷையூர்உதயநிலன்நாடக மன்றத்தின் ‘கண்டியரசன்’ கூத்து, ஊரணி கலாமன்றத்தின் ‘சாம்ராட் அசோகன்’ கூத்து ஆகியன ஆறுதல் பரிசில்களையும் பெற்றன.

## யு. என். பியும் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கியதேசியக்கட்சியின் அலுவலகத்தின்முன் நேற்று சில இளைஞர்கள் சிறிதுநேரம்ஆர்ப்பாட்டம் செய்தார்கள். யாழ். மாவட்டத்தில் நான்கு தொகுதிகளுக்காவது ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தவேண்டுமென்று அவர்கள் கோஷம் எழுப்பினர்.

அச்சமயம் அலுவலகத்திலிருந்தவர் இக்கோரிக்கை பற்றி கட்சியின் மேலிடத்துக்குத் தெரிவிப்பதென வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து அவர்கள் கலைந்துசென்றனர்.

## விஸ்வமடுவில் கருத்தரங்கு

கிளிநொச்சி, திங்கள் தமிழ்இளைஞர் பேரவையின் விஸ்வமடுக் கிளையின் கருத்தரங்கொன்று நாளை மறுதினம் புதன்கிழமை மாலை விஸ்வமடுக்குளம் விநாயகர் ஆலயத்தருகில் நடைபெறவிருக்கிறது.

திரு. இ. கார்த்திகேசு தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கருத்தரங்கில் சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், பொ. சத்தியசீலன் உட்படப் பலர் உரையாற்றுவர். (உ)

## ‘திருமுறைக் கலாநிதி’

சென்னை, ஏப். 25

சீர்காழியில் இன்று நடைபெற்ற வைபவமொன்றில் திருச்சி வாரெலிநிலையக் கலைஞர் சுப்பிரமணியதேசிகருக்கு ‘திருமுறைக் கலாநிதி’ என்ற பட்டமளிக்கப்பட்டது.

தர்மபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் இப் பட்டத்தை அளித்தார். (உ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# தமிழ் நாட்டில் சுய பலத்துடன் ஆட்சி அமைக்கும் விதத்தில் அ.அ.தி.மு.க. அபேட்சகரை நிறுத்தும்

## தேர்தல் உடன்பாடு குறித்து எம். ஜி. ஆருக்கு விசேட அதிகாரம்

சென்னை, ஏப். 25

தமிழ்நாட்டில் மற்ற எந்தக்கட்சியுடனும் இணையாமல் சுயபலத்துடன் ஆட்சி அமைக்கும் விதத்தில் அ. அ. தி. மு. க. அடுத்த சட்டசபைத் தேர்தலில் தேவையான அளவு தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தும் ஏன்று அ. அ. தி. மு. க. தலைவர்களில் ஒருவரான திரு. ஆர். எம். வீரப்பன் அ. அ. தி. மு. க. செயற்குழுக்கூட்டத்தின் பின் நிருபர்களிடம் பேசுகையில் கூறினர்.

இதேவேளையில் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் இதர கட்சிகளுடன் தேர்தலில்உடன்பாடு, தொகுதி உடன்பாடு ஆகியவற்றை மேற்கொள்ளும் முழு அதிகாரமும் அ. அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு எம். ஜி. இராமச்சந்திரனிடம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுநடை பெற்ற செயற் குழுக்கூட்டத்திலேயே திரு. எம். ஜி. ஆரிடம் இந்த அதிகாரம் வழங்கப்பட்டது.

### அரசியல் சாஸன திருத்தம் வேண்டும்

''ஹிந்தி மொழி பேசாத மக்கள் விரும்பும்வரை அந்தந்த மாநிலங்களில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கும்'' என்று மறைந்த பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவின் உறுதி மொழிக்கமைய அரசியல் சாஸனம் திருத்தி அமைக்கப் படவேண்டும் என்று மத்திய அரசைக்கோரும் தீர்மானம் ஒன்றும் செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மாநிலங்களில் ஆங்கிலம் அகற்றப்பட்டு ஹிந்திஇணைப்பு மொழியாக இருக்கும் என்ற மத்திய மந்திரிகள் சிலரின் கூற்று குறித்து இச்செயற்குழு கவலைதெரிவித்தது. (இ)

# ஜனதா கட்சி ஒரே கட்சியாகும்

புதுடில்லி, ஏப். 25

ஜனதா கட்சியிலுள்ள சகல கட்சிகளும் இணைந்து ஒரே கட்சியாக, இயங்குவதற்கான தீர்மானம் ஏற்பட்டுள்ளது.

நான்கு மணி நேரம் நடந்த கூட்டத்தில் இம்முடிவு ஏற்பட்டது.

மே மாதம் 1-ம் தேதி

(7-ப் பக்கம் பார்க்க)

பூட்டோவுக்கு எதிராக

# 99 மைல் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த முடிவு

## 20 லட்சம் பேர் பங்குகொள்வர்?

இஸ்லாமாபாத், ஏப். 25

பாகிஸ்தானில் ஜனாப்சுல்பிகார் அலிபூட்டோவுக்கு எதிராக மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த பாக். எதிர்க்கட்சி கூட்டணியினர் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர்.

லாகூரில் இருந்து இஸ்லாமாபாத்தில் ஜனப் பூட்டோவின் இல்லம்வரை சுமார் 99 மைல் தூரம் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறும்.

இந்த ஊர்வலத்தில் 20 லட்சம் பேர்வரை பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஊரடங்கு தளர்த்தப்பட்டது

5 முக்கிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது என்றும் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் ஓய்ந்தபாடில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

### மேலும் ஒரு தூதுவர் ராஜினமா

ஜனப் பூட்டோவின் அரசாங்கத்தை எதிர்த்து கெய்ரோவிலுள்ள பாக் தூதுவர் ஜனப் அகமத்சைத் 'கிருமானியும் தமது பதவியைராஜினுச் செய்துள்ளார்.

ஜனப்பூட்டோவின் ஆட்சியை எதிர்த்து ராஜினமாச் செய்த மூன்ருவது பாக் தூது

(6-ம் பக்கம் பார்க்க)

### 40 எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது

கராச்சி, ஏப். 25

பாகிஸ்தானில் எதிர்க்கட்சிக் கூட்டணியைச் சேர்ந்த 40 தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கராச்சியிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

காங். சட்டசபை ராஜினமா பிரச்னை

# சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளிக்கட்டும் காங்கிரஸார் ஜனதிபதியிடம் வேண்டுகோள்

புதுடில்லி, ஏப். 25

ஒன்பது காங்கிரஸ் மாநில முதலமைச்சர்களும் ராஜினமாச் செய்து அங்கு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற மத்திய அரசின் ஆலோசனை பற்றி தீர்ப்புக்கூறும் முடிவை சுப்ரீம்கோர்ட்டிடம் ஒப்படைக்குமாறு காங்கிரஸ் உறுப்பினர்கள் குழு ஒன்று தற்காலிக ஜனதிபதி திரு. ஜட்டியிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்துக் கேட்டுக்கொண்டது.

திரு. ஜட்டி உடல்நலம்குன்றியுள்ளமையால் இம் மகஜரை அவரது காரிய தரிசி திரு. பாலச்சந்திரன் பெற்றுக் கொண்டார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங்கின் இந்த ராஜினமா ஆலோசனை அரசியல் சாசனத்துக்கு முரணனது என்று திரு. பருவா, பி. டி. ராஜு முதலானேர்கையெழுத்

(6-ம் பக்கம் பார்க்க)

# மொரார்ஜி வீட்டின் முன் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஏப். 25

9 மாநில அரசுகளையும் கலைக்கவேண்டும் என்ற உள்துறை அமைச்சரின் யோசனையைக் கைவிடுமாறு கோரிய இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள், நேற்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் இல்லத்தின்முன் ஆர்ப்பாட்டம்செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் பினனர் இந்த இளைஞர்கள் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### பிரதமர் கருத்து

லோகசபைத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்த மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்பது பொதுக்கருத்தாக உள்ளது என்றும் ஜனதா அரசு அரசியல் சாஸன வரம்புக்குட்பட்டே சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் பிரதமர் திரு. தேசாய் இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்களிடம் தெரிவித்தார். (இ)

# ஜெயப்பிரகாசருக்கு தி. மு. க. நன்றி!

சென்னை, ஏப். 25

இந்தியாவை ஜனநாயக அழிவிலிருந்து காப்பாற்றும் பொருட்டு சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் ஆற்றிய பெரும் பணிக்காக தி. மு.க.பொதுக்குழு அவருக்கு நன்றிதெரிவித்துள்ளது.

திரு. ஜெயப்பிரகாஷுருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று நேற்றைய பொதுக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

லோகசபைத் தேர்தலின் போது செய்துகொண்ட ஜனதா—தி.மு.க. உடன்பாடு தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். நீடித்து அதால்எமகுக் மகிழ்வுதான்.

இவ்வாறு தி.மு.க. தலைவர் திரு. மு. கருணநிதி நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற தி. மு. க பொதுச்சபைக்கூட்டத்தின்பின்னரே திரு. கருணநிதி மேற்கண்டவாறு கூறினர். (இ)

### ஜெயப்பிரகாசருக்கு சத்திரசிகிச்சை

பம்பாய், ஏப். 25

பம்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணின் கையில் இன்று காலை சத்திரசிகிச்சை ஒன்று செய்யப்பட்டது.

சத்திரசிகிச்சைக்குப் பின் அவரின் உடல்நிலை திருப்திகரமாக இருக்கிறது என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)


மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமற் எல்.சி 50%

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



மேலும். பொலிமற். திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

நெல் — உருளைக்கிழங்கு — திராட்சை
புகையிலை — போஞ்சிவகை — தோடை
காய்கறி — பூஞ்செடி — பருத்தி
பயறுவகை — கோப்பி — வெங்காயம்

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாது பயிர்களை பாதுகாக்க தாமதியாது பாவியுங்கள் பொலிமற்,

தயாரிப்பாளர்.

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரோட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

### மணிவாக்கு

உண்பதாலடையுமின்பத்திலும் கூடிய இன்பம் உண்ணுது விடும்போது வருகிறது. யார்தானிதை அறியாதார்?

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

## விலைக்குறைப்பு!

இலங்கை நாணயம் மறுமதிப்பீடு செய்யப்பட்டதனுல் அதன் பெறுமதி அதிகரித்திருக்கிறது.

நாணயத்தின் பெறுமதி அதிகரித்ததனுல் கிடைக்கும் பயன் பொதுமக்களுக்குப் போய்ச்சேர வேண்டுமென்பது நிதியமைச்சரினதும் அரசினதும் நோக்கமாகும்.

நாணயத்தின் பெறுமதி அதிகரித்ததால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விலைகளும் குறையும்.

இந்த விலை குறைப்பின் பயனை பாவனையாளர்கள் அனுபவிக்க வேண்டுமென்று கருதிய நிதியமைச்சர் உள்ளூர் உற்பத்திப்பொருள்களின் விலைகளைப் பத்துசதவிகிதத்தினுல் குறைக்கும்படி உற்பத்தியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

உற்பத்தியாளர்களும் விலைகளைக் குறைப்பதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

சில பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைகளில்விலைப் பட்டியல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பட்டியல்கள் சில நல்ல வேடிக்கையாக இருக்கின்றன.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சவர அலகுகளைப் (பிளேட்டுகள்) பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

காலையில் இந்தப் பிளேடுகளினுல் சவரம் செய்பவர்களுக்கு அப்பர்சுவாமிகளின் உழவாரப்படைதான் நினைவுக்கு வரும்.

இத்தகைய உள்ளூர் உற்பத்திப் பிளேட்டுகளில் ஒரு பிளேட்டின்விலை அரைச் சதத்தினுல் குறைக்கப்பட்டிருக்கிறது.

விலை குறைப்புக்குஇதுஒரு உதாரணம். வேறு பல பொருள்களின் விலைகளும் இது போன்று சில சதங்களினுல்தான் குறைக்கப்பட்டிருக்கின்றன.

இப்படியான விலை குறைப்பு எந்த வகையிலும் பாவனையாளருக்குப் பயன்படாது!

இந்த விலை குறைப்பு யாரை ஏமாற்றுவதற்காக?

நாணயத்தின்மதிப்பு அதிகரிக்கப்பட்டதால்உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களுமே பயன்பெறுகிருர்கள் பொதுமளுக்குப் பயக்கவில்லை.

உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்கும்படி ஹோட்டல்காரர்களையும் நிதியமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கொழும்பிலுள்ள சில ஹோட்டல்கள் விலைகுறைத்து விலைப்பட்டியல்களை வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணம் முதலிய நகரங்களில் விலைஏறினுல் ஏறினது தான் இறங்குவதென்றுல் பெரும்பாடு.

சீனி விலை குறைந்தாலென்ன வேறெந்தப் பொருளின் விலைகுறைந்தாலென்ன தேநீரின் விலையோ, உணவுப் பண்டங்களின் விலையோ இறங்கவில்லை.

விலையேற்றத்துடன் மெலிந்துபோன பலகாரங்கள் பின்னர் பழைய உருவம் பெறுவதுமில்லை.

விலைக் கட்டுப்பாட்டு இலாகா இவற்றையெல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையிலில்லை.

பொதுமக்கள் உடனுக்குடன் தொடர்புகொள்ளக் கூடியதாக ஒவ்வொரு மாகாணத்திலும் திடீர் பரிசோதனைக் குழுக்கள் அமைப்பது, விலைக் குறைப்பின் பயனைப் பொதுமக்கள் அனுபவிப்பதற்கு உதவுமென்று நம்பலாம்.

ஆசிரியருக்கு கடிதம்

## வீதிகளும் விபத்துக்களும்

யாழ்ப்பாண நகரில் வீதிகளில் விபத்துக்கள் தற்போது அதிகரித்து வருவதற்கு இரு பிரதான காரணங்களைக் கூறலாம். முதலாவது செப்பனிடப்படாத மோசமானவீதிகள் மற்றது மிக ஒடுக்கமான வீதிகள் புதிதாகக் கட்டடங்களைக் கட்டுபவர்கள் வீதிகள் பற்றிய விதிகளை எள்ளளவாவது பொருட்படுத்துவதாகத் தெரிவதில்லை. சுவர்கள் தெருவுக்குள் தலைநீட்டியபடியே வந்துவிடுகின்றன.

இதுபற்றி யாழ். மாநகர சபையினர் சிறிதாவது அக்கறை காட்டாத பட்சத்தில் விபத்துக்கள் மேலும் கூடிக் கொண்டே போவதோடு வளர்ந்துவரும் யாழ். நகரின் அழகும் படுமோசமானநிலைக்கு பின்தள்ளப்படும்.

யாழ். மாநகர சபையைச் சேர்ந்தவர்கள் நகர வீதிகளால் ஒருமுறையாவது வலம் வந்தால் நிலைமை நன்கு கண்ணுக்குப்புலப்படும். கவனித்தால் மிக நல்லது.

'நகரவாசி'

கொட்டடி.

## அதிபராக்க கோரிக்கை

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் புதிய அதிபராக கொழும்பு றேயல் கல்லூரியில் கடமையாற்றும் திரு. ஏ. கே. சர்மாவை நியமிக்குமாறு பெற்றோர்கள் பழைய மாணவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசவையும் கல்விப் பகுதி மேலதிகாரிகளையும் கேட்டுள்ளனர்.

இக்கல்லூரியின் பழைய மாணவரான திரு. ஏ. கே. சர்மா இங்கு ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். (இ)

• • •

## நிபந்தனையின்றி ஜனதாவில் சேரலாம்

புதுடில்லி, ஏப்ரல் 25

ஜனதாகட்சியில் சேரவிரும் பும்மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த லோகசபை உறுப்பினர்களையும் சட்டசபை உறுப்பினர்களையும் நிபந்தனை எதுவுமின்றிச் சேர்த்துக் கொள்ள ஜனதாகட்சி தீர்மானித்துள்ளது. (இ)

# வாக்காளரும் வேட்பாளரும்

(தராசு)

ஈழத்திலே இன்னும் சில வாரங்களில் பொதுத் தேர்தல் வருகிறது.

சிரிப்புச் சித்திரக்கலை ஞானி 'சுந்தர்' செய்யும் கிண்டலின்படி வாக்காளர் தொகையிலும் வேட்பாளர் தொகை கூடிவருகிறதாம்!

ஒரு தொகுதிக்கு ஒருபிரதிநிதி தான் (இரட்டைப்பிரதிநிதிதொகுதியைத்தவிர)என்று அரசியல் சட்டம் கூறுகிறதென்றுலும் ஒருவர் எவ்வளவு தொகுதிகளிலும் போட்டியிடலாம்; ஒரு தொகுதியில் எவ்வளவு வேட்பாளரும் போட்டியிடத் தடையில்லை.

ஆனுல் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் பெருந்தொகைக் கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென்றும் பதிவான வாக்குகளில் எட்டில் ஒரு பங்கு வாக்குகள் கிடைக்காவிடில் கட்டிய பணத்தை இழக்க வேண்டுமென்றும் சட்டம் கூறுவதால் அரசுப் பேரவை மூலம் பொதுமக்களாகிய நமக்குப்பணி செய்ய பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆசைப்படினும், அவர்கள் முன்வரத் துணிவதில்லை.

மேலும் பொதுத்தேர்தலில் போட்டி இடுவதென்றுல் அதிக செலவு செய்யத் தயாராக இருக்க வேண்டும் பணக்காரரைத் தவிர ஏனையோர் இதைப்பற்றி நினைக்கவும் முடியுமா?

திறமைசாலிகளும் நல்லவர்களும் சேவை மனப்பான்மையுள்ளவர்களும் பலர் இருக்கலாம். ஆனுல் பணம் இல்லாவிடில் அவரை எந்தக்கட்சி தான் வேட்பாளராக நியமிக்கும்? மேலும் சாதி, செல்வாக்கு காரணங்களும் இதற்குக் குறுக்கே நிற்கலாம்.

இவற்றை எல்லாம் கவனிக்கையில், இப்போதுள்ள தேர்தல் முறை திருப்தியானதல்லவென்பதையும் அதில் அடிப்படையிலேயே பல திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளதென்பதையும் நாம உணரக் கூடும்.

பாரத நாட்டில் தேர்தல் முறையை மாற்றி அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் பீஹார் இயக்கத்தை ஆரம்பித்தார். கிளர்சியைத் தூண்டினுர் தேர்தல் முறையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை என்றுலும், குடும்பக் கட்டுப்பாடு முதலிய வேறு காரணங்களால் அங்கு அரசியல் மாறுதல் ஏற்பட முடிந்தது. அவரது தலைமையை நாடிநிற்கும் அரசாங்கம் அங்கு ஆட்சிக்கு வந்திருப்பதால், புதிய அடிப்படையில் தேர்தல் சட்டத்தை மாற்றியமைக்க அங்கு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. அது எப்படிப் பயன்படப் போகிறதென்பது இனித்தான் தெரியவேண்டும்.

தகுந்தவர்கள் பலர் வேட்பாளராக வர முன்வருவதால் அவர்களில் யாரை நியமிப்பதென்பது கட்சியின் தலைமைப் பீடங்களுக்குப் பெரிய பிரச்னையாகும். ஒருவரை நியமித்தால் மற்றப் பலரது கோபத்துக்கும் எதிர்ப்புகளுக்கும் இடமேற்படும். இந்தத் தர்மசங்கடத்திற்கு என்ன செய்யலாம்?

முற்காலத்தில் தமிழர்கள் இதற்கு நல்ல வழிகண்டார்கள். குடவோலை முறைப்படி, பல தகுதியுள்ள வேட்பாளரின் பெயர்களையும் தனித்தனி ஓலைகளில் எழுதி, ஒரு குடத்துக்குள் போட்டு, அச்சீட்டுகளில் ஒன்றை எடுக்கும்படி ஒரு குழந்தையைப் பணிப்பார்கள். குழந்தை எடுக்கும் சீட்டிலுள்ளவரே தெரிவுசெய்யப்பட்டவராகக் கொள்வர்.

ஈழத்திலோ, இந்தியாவிலோ அந்த முறைப்படி பொதுத் தேர்தலை நடத்தக்கூடிய வாய்ப்பு சமீபத்தில் ஏற்படுமா என்பது பெரிதும் சந்தேகமே. ஆனுல் வேட்பாளரை நியமிக்கவாவது இம்முறையைத் தமிழர்கள் பயன்படுத்த முன்வரலாம்.

ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கையும், வெற்றியும் பெற்றுள்ள நம் முன்னேர்கள் கையாண்ட முறையை அலட்சியம்செய்து ஒதுக்கிவிடாமல், அதைத் தமிழ்த் தலைவர்களாவது கையாண்டால், தமிழருக்கு அதிக செலவில்லாமல், நல்ல பிரதிநிதி கிடைப்பதுடன், மற்றவர்களுக்கும் இது மேலான வழிகாட்டுவதாகவும், நாட்டில் ஜனநாயகம் அமைதியாக வெற்றிபெறவும் வகை செய்வதாக இருக்கும்.

# 'சிங்கள-தமிழ் கலாச்சாரம் பின்னிப் பிணைந்தவை'

## நாவலப்பிட்டி சாகித்திய விழாவில் உரை

நாவலப்பிட்டி, திங்கள்

'நான் படித்த காலத்தில் பாடசாலைகளில் சிங்கள-தமிழ் பேதங்கள் இல்லை. தேசிய நலனையும் கல்வி வளர்ச்சியையும் கருதியே அக்காலத்தில் கல்வி கற்றேம். சிங்கள—தமிழ்இலக்கியங்களில் பொதுவான நல்ல பண்புகள் உள்ளன. தமிழ்—சிங்கள சகோதரர்கள் ஒன்றிணைந்து இந்தநாட்டை சோஷலிஸப் பாதையில் நடத்திச் செல்ல முன்வரவேண்டும். இந்த நாட்டில் வாழும் சிங்கள—தமிழ் சகோதரர்கள் நெருங்கி உறவாடி வாழ்வதற்கு சிங்கள தமிழ் இலக்கியங்களும் கலாச்சாரங்களும் பின்னிப்பிணைந்திருப்பது பெருமைப்படக்கூடியது.'

இவ்வாறுகலாச்சாரத்தினைக்கள அதிபர் திரு. பி. ஏ. அபேவிக்கிரம நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ் சாகித்திய விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து பரிசில்கள்வழங்கிப் பேசுகையில் கூறினுர்.

மலையகத்தில் முதன்முதலாக எடுத்த இவ்விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு வந்து மண்டபத்தின் உள்ளும் புறமும் நிறைந்திருந்தனர். அவசர அலுவல்கள் காரணமாக கலாசார அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கோன் இவ்விழாவில் பங்கு கொள்ளவில்லை. விழா ஆரம்பிப்பதற்குமுன் கதிரேசன் கோவிலிலிருந்து மேளவாத்திய சகிதம் விழாத் தலைவர்கள், பேச்சாளர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா பிரமுகர்களுக்கு மாலை அணிந்து வரவேற்புரை கூறினுர்.

யாழ். வளாகத் தலைவரும், தமிழ் இலக்கிய ஆலோசனைக் குழுவின் தலைவருமான கலாநிதி க. கைலாசபதி, மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியதாவது:-

கலை இலக்கியங்களை ஆகக் கூடிய அளவு மக்களுக்கு வழங்குதற்கு ஏற்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் நவீன காலத்தில் உள்ளன. பல்லாயிரக் கணக்கான வாசகர்களைச் சேர்க்கக்கூடிய வகையில் நூல்களும் சஞ்சிகைகளும் நவீன யுகத்திலே மக்களைச் சென்றடைகின்றன. இந்நிலையில் தரத்தை எவ்வாறு பேணுவது என்ற பிரச்னை இக்காலத்து எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் எதிர்நோக்குகிறது.

ஆகக்கூடியஅளவு மக்களுக்கு தரம் உயர்ந்த கலை இலக்கியங்களை அளிப்பது நமதுசமுதாய அமைப்பிலே நடைமுறையில் சாத்தியமானதல்ல. ஆனுலும் அதுவே காலத்தின் தேவையாகவும் உள்ளது. எனவே இந்தப் பிரச்னைக்குமுகம்கொடுத்து அதில் இயன்றளவு வெற்றி காண்பதே நவீன காலத்து எழுத்தாளர்களுடைய சவாலாக உள்ளது இதற்கு அனுசரணையாக தரமுயர்ந்த இலக்கியங்களின் ரசனைக்கு வழிவகுக்க கலை இலக்கியக் கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் பொதும் உதவுகின்றன.

திரு. நீர்வை பொன்னையன் நன்றி கூறினுர். நாவலப்பிட்டி நகரப் பிரமுகர் திரு. பி டி. கிருஷ்ணசாமி தலைமையில் மலையகக் கலைநிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றன.

காலை நிகழ்ச்சிகள் கல்வி அமைச்சு வித்தியாதிபதி திரு. கி. இலக்குமணஐயர் தலைமையில் நடைபெற்றது.

அவர் பேசுகையில் கூறியதாவது:

வையத்துள் வாழ்வாங்கு வாழும்வகையை வள்ளுவர் பெருமான் அழகாக இருவரிகளில் தெரிவித்தார். ஒன்று பழிக்கு அஞ்சிப்பொருளைச் சேர்க்க வேண்டும். மற்றது பல்லோருடனும் அதனைப்பகிர்ந்து உண்ணவேண்டும். இலக்கியத்துக்கு ஓர் இலட்சியம் வேண்டும்.

இலக்கியம் படைக்குப்யோக்கியம் எமக்கு உண்டா? நாம் படைப்பதை நமது சாதனையில் காட்டுகிறேமா? அல்லது அதில் ஒரு பகுதியையேனும் எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறேமா என்பவை போன்றவற்றைச் சிந்திக்க வேண்டும்.

கலாச்சார அமைச்சு கலை—இலக்கியம், சமயம் ஆகியவற்றிற்குச் செய்துவரும் பணியை நாம பாராட்டவேண்டும். அதனைப் பலரும் பயன் பெறச் செய்யவேண்டும்.

காலை நிகழ்ச்சி திரு. நா. அருமைநாயகம் ஓதிய தமிழ் வணக்கப் பாடலுடன் ஆரம்பமானது. கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு. நா. நடேசன் வரவேற்புரையும், திரு. வ. அ. இராசரத்தினம் நன்றியுரையும் கூறினுர்.

'மக்களும் இலக்கியமும்' என்ற தலைப்பில் கலாநிதி அ. சண்முகதாஸ், ஜனுப் சுபைர் இளங்கீரன், திரு. க. சண்முகலிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

ஜனுப் எம். ஏ. நுஃமான் தலைமையில் 'நாட்டுமக்கள் நலமுற்றுவாழ' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது ஜனுப் சாரணுகையூம், திரு. எம். சடாட்சரன், திரு. ஏ பீ. வி. கோமஸ், மூதூர் முகைதீன் ஆகியோர் இதில்பங்குகொண்டனர்.

# தலைமைப்பீடம் தேவையென கனவிலும் எண்ணவில்லை!

## ஆனுல் தமிழர் போருக்கு சேனுதிபதியாக இருக்கக்கூடியவர் யார்?

### நடராசாவுக்கு சுந்தரர் பதில்

அன்பார்ந்த நடராசா,

6-4-77 'ஈழநாடு' தினசரியில் பிரசுரிக்கப்பட்ட கடிதத்தில் உள்ள ஒவ்வொரு கேள்விக்கும் குற்றச்சாட்டுக்கும் பதில் கொடுப்பது என் கடமை அரைப்பொய் முழுப்பொய்யிலும் பார்க்க விஷங்கூடியது என்ற ஆங்கிலப் பழமொழியை மனதில் வைத்துக் கொண்டு பதில் எழுதுகிறேன்.

**முதல் முழுப்பொய்:**

தங்கள்மாவைஆலய சாதனையையும் இன்றைய கொள்கையையும் முன்வைத்து எந்தத் தொகுதியிலும் போட்டியிட்டு வெல்லுவீர்களா என்று கேட்டிருந்தீர்கள். ஈழத்தில் தமிழ் பேசும் மக்களின் தொகுதிகள் ஒன்றிலும் நான் அடுத்த பொதுத் தேர்தலில் அபேட்சகராக ஈடுபடமாட்டேன் ஈடுபடும் நோக்கத்துடனும் வரவில்லை. ஏனென்ருல் என் அனுபவத்தின்படி காசு, கசிப்பு, கபட வேஷம் ஆகியஎல்லாவற்றையும் வழங்காவிட்டால் ஒரு தெரிவிலும் ஒரு அபேட்சகரும் வெல்லுவது இலகுவானதன்று. நான் ஈடுபட வந்த காரணம் என்னவென்ருல் எதிர்வரும் பொதுத் தேர்தல் பௌத்த சிங்கள பெரும்பான்மையோருக்கும் சைவ, இஸ்லாமிய, கிறிஸ்தவ, கத்தோலிக்க சிறுபான்மையோருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் என்று நான்கருதுவதால்தான். இந்தப்போரில் தமிழருக்குத் தகுந்த சேனுதிபதியாய் இருக்கக் கூடியவர் யார்? எனது சீவிய வரலாற்றை விரைவில் பகிரங்கப்படுத்துவேன். அதை படித்து வி. சுந்தரலிங்கத்திலும் பார்க்கத் தகுதியானவர் இருக்கிருர் என்று தமிழர்கள் தெரிந்தெடுத்து அதைப்பொது மக்கள், பெரியோர் ஆமோதித்தால் நான் அடுத்த புகையிரத வண்டியால் வவனியாவுக்கு (எனது கமத்துக்கு) சென்று விடுவேன்.

மாவை முருகன் ஆலயத்தில் 1968ம் ஆண்டு முருகன் கருணையால் ஈட்டிய வெற்றி நிலையாகிவிட்டது.

தாங்கள் சமயத்தையும் அரசியல், சமுதாயத்தையும் இணைப்பது ஜனநாயக முறைக் குற்றத்திலும் பெருங்குற்றம். தற்போது ஈடுபட்டிருக்கும் பேரவைகளெல்லாம் சிறுபான்மைத் தமிழரின் வாக்கைப் பெற்று வெல்லுவோமென்று எதிர்பார்க்கின்றனர். அப்படி வென்ருல் தமிழ் பேசும் இனங்களும் சிறுபான்மையோரும் பௌத்த சிங்களவருக்கு அவர்களின் சிறுபான்மையோரைப் போல் அடிமையாக இருக்க வேண்டிவரும்.

**இரண்டாவது முழுப்பொய்**

உண்மையில் தங்கள் உள்ளத்தில் பொருமை என்றும் கறை படிந்துள்ளதென்பதைத் தங்களின் பகிரங்கக் கடிதம் பறைசாற்றி நிற்கிறதல்லவா என்று கேட்டுள்ளீர்கள்.

பதில்; இது ஒரு போலிப் பொய். எனக்குத் தலைமைப் பீடம் தேவையென்று கனவிலும் நினைக்கவில்லை. எனது கனவு பௌத்த சிங்களவருடன் போரிட்டு வெல்லுவது தான் எனது தற்போதைய நோக்மெம் என்னவென்ருல் இந்தத் தேர்தலில் 30-ல் 25 தொகுதிகளுக்கு அபேட்சகரைத் தெரிந்து வெற்றி பெறுவிட்டால் சேனுதிபதிப்பதவியையும் அகற்றி கமத்துக்குத் திரும்புவதே. நான் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் எரிச்சல் கொண்டிருக்கிறேன் என்று ஒளித்து மறைத்துக் கூறியிருக்கிறீர்கள். எனது அன்பன் செல்வநாயகம் இன்று நோயுற்றிருக்கும் நிலையில் முழு மெய்யானவற்றையும் எழுதினுல் அயோக்கியமாகஇருக்கும் அவருக்குக் கடவுள் கிருபையால் சுகம் வந்தபின் தங்கள் குற்றச்சாட்டுக்கு செய்திகள் ஒவ்வொன்றும் காட்டிப் பதில் தருவேன்.

**மூன்ருவது கேள்வி**

1948ம் ஆண்டு டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரிசபையில் அங்கம் வகித்ததை அப்போது மன்னர் எம். பி. யாக இருந்த திரு சிற்றம்பலமும் தாங்களும் மறுக்கமாட்டீர்கள் அல்லவா?

ப; ஏன் நீங்கள் உண்மையை ஒழித்திருக்கிறீர்கள்? சோல்பரித்திட்டத்தை பாராளுமன்றத்தில் விவாதித்தபோது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒரு வார்த்தையிலாவது எதிர்த்துப் பேசவில்லை. அதற்கு அவரோ செல்வநாயகமோ தமிழ் காங்கிரஸ்கட்சியினர் ஒருவராவது எதிர்த்து வாக்களிக்கவுமில்லை. இதன்பின் ஆறுமாதத்திற்கிடையில் பொன்னம்பலமும் மந்திரிசபையில் சேர்ந்து மந்திரியாய் இருந்தார். அப்போ சேனநாயகாவின் மந்திரிசபையில் இருந்த மூன்று ஈழத்தமிழ் மந்திரிகள் பொன்னம்பலம், சுந்தரலிங்கம், சிற்றம்பலம் ஆகியோர். இசுற்கும்பலமாதங்களின் பின்புதான்என்அன்பன் செல்வநாயகம் தமிழ்காங்கிரஸிலிருந்து விலகி தமிழரசுக்கட்சியை ஸ்தாபித்தார். அடுத்த தேர்தலில் செல்வநாயகத்தை நடேசபிள்ளைதோற்கடித்தார்.

அதன்பின் நீங்கள் கூறுவது போல் தகிடுதத்தம் போடாமல் நேர்மை நிதானத்துடன் எனது மனச்சாட்சியின்படி நடந்திருக்கிறேன். மந்திரிப்பதவியை உதறி வெளியேறிதமிழ் அரசுக்கட்சியைத்தாக்கி விரோதமாக சண்டை நடத்திக் கொண்டு வந்திருக்கின்றேன். அதுவும் ஈழத் தமிழ்இனங்கள் தங்கள் பரம்பரைப் பூமிகளை

**விவாதமேடை**

உறுதிகளின்படியும்படங்களின் படியும் ''சாம, பேத, தான, தண்டம்'' முறையின்படிபெற்றுக்கொள்ள எத்தனித்தேன், எனது சீவியகாலம் வரையும் எத்தனிப்பேன். 1956ல் பதவியாவிலும், 1958ல் வவுனியாவிலும் நேரடியாக ஈடுபட்டு வெற்றியீட்டித் தமிழனின் பிரதேசத்தைப் பாதுகாத்தேன்.

கே- தமிழ்நாடே எமது கோரிக்கை என்று ஆட்சிமன்றத்திலும் பகிரங்கக் கூட்டங்களிலும் ஏடுகளிலும் வெட்ட வெளிச்சமாக தமிழ்அரசுக் கட்சியினர் கூறிவந்துள்ளனர்.

ப- இதுவும் உண்மையல்ல. பொய். தமிழ்நாடு எமது கோரிக்கை என்று எந்த ஆட்சி மன்றத்தில் எந்தத் திகதியில் என்று சுட்டிக்காட்டி வாசித்து காட்டுவீர்களா? அச்சுப் பிரதி மூலம் காட்டுவீர்களா? தனித் தமிழ் நாடே எமது கோரிக்கை என்று எந்தக்கூட்டத்தில் அல்லது எந்தப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தினர்?

ஆனுல் அண்மையில் நடந்த வட்டுக்கோட்டைக் கூட்டத்தில் தனித் தமிழ்நாடு என்ற கொள்கையைப்பகிரங்கப்படுத்தினுர்கள். அது காரணமாகத்தான் நாலுதமிழ்அரசுக்கட்சிப் பிரமுகர்கள் அவசரகாலச் சட்டத்தால் அகப்பட்டு ட்ரயல் அட் பார் நடந்து பின் உங்கள் தந்தை செல்வாவின் உதவியால் அரசாங்கம் வழக்கை வாபஸ்பெற்றது அந்தஇடைஞ்சலில் ஈடுபட்ட 10-15 இளைஞர் சிறையில்இருந்து பொதுத் தேர்தல் ஒரு காரணமாகவர அரசாங்கம் விடுதலைசெய்தது. இதில் நான் கூறியிருக்கும் விபரத்தை உண்மையில்லையென நிரூபித்தால் உங்களிடம் மன்னிப்புக் கேட்பேன். அப்படி நீங்கள் காட்டாவிட்டால் பொதுமக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

நானே போலித்தனமாக இவ்வளவு காலமும் நடக்கவில்லை. இனிமேலும் நடக்கப்போவதில்லை. நான் மூன்றுமுறை கொள்கைக்காக—கொடி, பாஷை, உரிமை முதலிய விடயங்களுக்காக பாராளுமன்ற சபையிலிருந்து ராஜினுமாச் செய்து மீண்டும் தெரிவுகளில் வெற்றிபெற்று ஈழத்தமிழ்த் தொண்டனுக செயலாற்றியிருக்கிறேன்.

1954ல் முதன் முதலாக 'தனித் தமிழ் இனம்' என்ற ஒரு பிரேரணையை பாராளுமன்றசபையில் சமர்ப்பித்தேன் அப்பிரேரணையை தமிழ்அரசுக் கட்சியார் ஆமோதிக்கவுமில்லை அதற்குச் சாதகமாக வாக்களிக்கவுமில்லை. 22 வருடங்களின் பின்புதான் அவர்களுடைய மூளைக்குள் இந்தப் பிரேரணையின் கொள்கை புலப்பட்டது. நான் திரு. ஞானமூர்த்தியின் வேண்டுகோளால் தமிழர் ஒற்றுமை முன்னணியில் என் கொள்கையை ஒரு எள்ளளவாவது மாற்ருது சேர்ந்தேன். அதன் காரியசபை சுதந்திரனுக்குப் பணஞ்சேர்க்கவும் தொடர்ந்து இயங்கவைக்கவும் முனைந்தது. சிறையில் இருக்கும் இளைஞரின் பெற்ருேருக்கும் அவர்களில் தங்கியிருக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவு பண உதவி கொடுத்தார்கள் என்ற விபரம் வெளிவரவில்லை.

நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். நீங்களும் உங்களைப்போல் பலரும் பொய் வதந்திகளால் என்னுடைய பெருந்தனத்தைக் குறைக்க எத்தனிக்கிறீர்கள். சரி சில வேளை நீங்கள் அனுகூலம் அடைவீர்கள். ஆனுல் உங்கள் வெற்றி ஈழத்தமிழ் இனத்தினரின் பெருந்தோல்வியாக முடியும். என்கடமையை,என்வல்லமையை ஈழத்தமிழ் இனத்துக்கு அர்ப்பணஞ் செய்கிறேன். அவர்களின் தீர்ப்பை எதிர்பார்ப்பேன்.

கே: தாங்கள் காந்தியின் போராட்டங்களை எப்படித்தான் ஏற்றுக்கொண்டீர்களோ?

ப: ஏற்றுக்கொள்ளவில்லை, ஏற்றுக்கொள்ளவும் மாட்டேன். அவருடைய அஹிம்சை முறையால்தான் துப்பாக்கிச் சூடுபெற்று மாண்டார். 'தன்னைக் கொல்லவந்த பசுவையும் கொல்லலாம்' என்ற ஒரு முக்கிய வாக்கியத்தைநான் ஏற்றுக்கொண்டு நடந்திருக்கிறேன்; மேலும் நடப்பேன்.

கே: தாங்கள் அடிக்கடி திசைதிரும்புவதுபோல் மக்கள் எல்லோரையும் திசைதிருப்ப முனைகிறீர்களா?

ப: நான் எப்போ எந்தத் திசையிலிருந்து எந்தத் திசைக்கு மக்களைத் திருப்பியிருக்கிறேன்? சுட்டிக்காட்டுங்கள். நீங்கள் - நடராசா - தமிழரசுக் கட்சியில், பின்னர் சிங்கள சமஷ்டிக்கட்சியில், அதன்பின் தமிழர் ஒற்றுமை முன்னணியில், பின் தமிழர் விடுதலைக் கூட்டணியில் உங்களைப்போல் நான் திசைதிரும்பவில்லை.

கே- தங்களுக்கு முன்னமே தனித்தமிழ்நாடு கோரிக்கையையுள்ளடக்கிய தமிழ்அரசுத் தந்தை செல்வா?

ப: வட்டுக்கோட்டைக் கூட்டத்திற்குமுன் தந்தை செல்வா தனிப்பட்ட எழுத்துமூலமோ தனிப்பட்ட பேச்சுமூலமோ எங்கே எவ்வாறு தனித்தமிழ் நாடு கோரிக்கையைப் பகிரங்கப்படுத்தினுரென்று உறுதியாக அத்தாட்சிப்படுத்தினுல் நான் நல்லூர் கந்தசாமிகோவிலுக்கு ரூபா 50/- (ஐம்பது) அபராதம் கொடுப்பேன். அப்படி நீங்கள்காட்டாவிட்டால் ரூபா 50/- இக்கோவிலுக்கு அபராதமாகக் கட்டவேண்டும். இப்படி நடப்பீர்களா?

---

'தமிழ் இனத்தின் விடுதலைக்காக

## உரிமைக்குரல் மட்டுமல்ல உயிரையும் கொடுப்போம்''

கல்வியங்காடு, திங்கள்

தமிழ் இனத்தின் விடுதலைக்காக உரிமைக் குரலை மட்டுமல்ல உயிரையும் கொடுப்போம் தமிழ் இளைஞர்கள் தீவிரத்துடன் தமிழ் ஈழம் காணப் போராடவேண்டும்''

இவ்வாறு மானிப்பாய் சாத்தவத்தைப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்ற தமிழர் விடுதலை கூட்டணியின் கருத்தரங்கில் நல்லூர் தொகுதி இளைஞர் பேரவையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி கூறினுர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

ஒரு தேசிய இனத்தை அடக்கி ஆளவோ அல்லது அவர்களை அடிமைப் படுத்தவோ இன்னொரு தேசிய இனத்திற்கு உரிமையில்லை அடக்கி ஆள நினைக்கும் அந்தத் தேசிய இனத்திற்கு இருக்கும் உரிமை அடக்கப்படுகின்ற இனத்திற்கும் உண்டு இதை எவரும் மறக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. இளைஞர்களாகிய நாம் உடனடியாக தீவிரத்துடன் தமிழ் ஈழ விடுதலைப் போரில் ஈடுபட வேண்டும். கொண்ட கொள்கைக்காக இன விடுதலைக்காக உரிமைக் குரலைமட்டுமல்ல உயிரையும் கொடுத்து தமிழ் ஈழத்தை அமைக்க வேண்டும்.

ஒரு நாட்டின் விடுதலைக்காக உழைப்பவர்கள் இளைஞரும், தொழிலாளரும் தான். ஆகையால் கூடிய சீக்கிரத்தில் மேலும் பலஇளைஞர்பேரவைக் கிளைகளை அமைத்து செயற்பட முன்வரவேண்டும்.

இக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய உடுவில் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் தமது உரையில் கூறியதாறது;

தமக்கென ஒரு மொழி,ஒரு கலாச்சாரம் என்று ஒரு இனம் இருந்தால் அது தேசிய இனம் என்று லெனின் ஸ்டாலின் போன்றவர்கள் கூறியுள்ளார்கள் அத்தகைய இனம் உரிமையுடன் வாழவேண்டியதவசியம் எனவேதான் தமிழ்மக்களுக்கென ஒரு தனி நாடு அவசியமாகிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தல் ஒரு சர்வஜன வாக்கெடுப்பேதான் இதைநாம் நன்கு பயன்படுத்தவேண்டும்.

இதுவரை இங்கு ஆட்சி நடத்திய எந்த அரசும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வரவில்லைஎனவேஎமது உரிமைக்காக நாமே போராட வேண்டும் (இ)

---

# டிப்ளோமா பரீட்சையில் தரப்படுத்தல் தீர்மானம்!

## தமிழ் விரிவுரையாளர் எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

கல்விப்பீட மனிதப் பண்பியல் உள்வாரி டிப்ளோமா பரீட்சையில் தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தல் செய்யவேண்டும் என 27 விரிவுரையாளர்கள் தீர்மானித்ததைத் தொடர்ந்து 7 தமிழ் விரிவுரையாளர்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு வளாகத் தலைவர் திரு. ரஞ்சிகுசியரோ தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. உள்வாரி மாணவரின் கடந்த வருட பரீட்சை முடிவு பற்றி ஆராயப்பட்டது.

இரண்டு மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் 4 மணி நேரம் நடைபெற்றது.

420 சிங்கள மாணவர்களினதும், 53 தமிழ் மாணவர்களினதும் ஆங்கில மொழி மூலமான 45 மாணவர்களினதும் பரீட்சை முடிவுகள் ஆராயப்பட்டன.

தமிழ் மாணவர்கள் கூடுதலான புள்ளிகள் எடுத்திருப்பது சந்தேகத்தைக் கொடுப்பதாக விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

சந்தேகப்படுவது எங்கள் நேர்மைக்கு சவால் விடுவதாக இருப்பதாக விரிவுரையாளர் திரு. ப சந்திரசேகரம் ஆட்சேபித்தாராம்.

சிங்கள மாணவர்கள் மட்டும் ஏன் குறைந்த புள்ளிகள் எடுத்துள்ளார்கள்? என மதிப்பீடு செய்யுமாறும் இவர் கேட்டுக்கொண்டதை மற்றும் தமிழ் விரிவுரையாளர் ஆதரித்தனர்.

சிங்கள மாணவர்களின் புள்ளிகள் அடிப்படையை வைத்து தமிழ் மாணவர் புள்ளிகளை தரப்படுத்தவேண்டும் என்ற தீர்மானத்தை சில விரிவுரையாளர் கொண்டு வந்தனராம்.

திரு. சந்திரசேகரம் அப்படி

(7-ம் பக்கம் பார்க்க)

### புதிய அரசியலமைப்புக்கு

# எம். பிக்கள் அனைவருமே விசுவாசம் தெரிவித்தனர்

## வட்டு. எம். பி. கூறுகிறார்

காரைநகர், திங்கள்

''புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு விசுவாசமாக நடப்பேனென்று நான் மட்டுமல்ல, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. செல்வநாயகமும் கைச்சாத்திட்டுள்ளார்.''

காரைநகர் கோவளம் கிராம அபிவிருத்திச்சபைக் கட்டடத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் திரு. தியாகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இந்நாட்டிலுள்ள சகல தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும் புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசமாக நடப்போமென்று கைச்சாத்திட்டுள்ளார்கள். என்னை மட்டும் 'துரோகி கையெழுத்து வைத்துவிட்டார்' என்று கூறி மக்களை ஏமாற்ற முயல்கிறார்கள். நீங்கள் ஏமாறவேண்டாம்.

''இங்குள்ள அநேகர் பசறை பண்டாரவளை, அப்புத்தளை, எட்டியாந்தோட்டை போன்ற இடங்களில் வியாபாரம் செய்கிறார்கள். தனித் தமிழ்நாடு தோன்றினால் இவர்களின் நிலை என்பதை இங்குள்ள தாய்மார்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

''இக்கிராம அபிவிருத்தித் திட்டம் இருபதினாயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது. எந்தக் கிராம அபிவிருத்திக் கட்டடமும் இவ்வளவு தொகையில் கட்டப்படவில்லையென்று அரசாங்க அதிபரே குறிப்பிட்டுள்ளார். ஏழுஆண்டுகளில் இத்தொகுதி நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளது. இன்னும் பல அபிவிருத்திகளைச் செய்யப்போகிறேன்.

''இப்பகுதி மக்களின் பொருளாதார நிலை மேலும் உயரவேண்டும். தனித் தமிழ்நாடு வந்தால் நாம் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகவேண்டி ஏற்படுமென்பதை மறவாது செயற்படவேண்டும்.''

யாழ். அரசாங்க அதிபர் திரு. லால் விஜயபால கட்டடத்தைத் திறந்துவைத்தார். தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. சு. சண்முகசுந்தரம், திரு. நாவேந்தன், திரு சுந்தரையா உட்படப் பலர் உரையாற்றினர்.

திரைப்படக்காட்சி, நாடகங்கள் ஆகியனவும் இடம் பெற்றன. (ஈ)

## பிரிட்டனின் அன்பளிப்பு

கொழும்பு, திங்கள்

பிரிட்டன் இலங்கைக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதிமிக்க நூல்களை அன்பளிப்பாகவழங்கியுள்ளது.

இந்த அன்பளிப்பு பிரிட்டிஷ் கவுன்ஸில் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. (உ)

## சூறவளிக்கு 13 பேர் பலி!

டாக்கா, ஏப். 25

பங்களாதேஷில் நேற்று வீசிய பலத்த சூறவளியினால் 13பேர் கொல்லப்பட்டனர் என்றும் 100 பேர் படுகாயமடைந்தனர் என்றும் டாக்கா செய்திகள் தெரிவித்தன.

# சுயாட்சிக் கழகம் கிழக்கிலும்போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

கிழக்கு மாகாணத்திலும் தமிழர் சுயாட்சிக் கழகம் அபேட்சகர்களை நிறுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

தெற்கு மாகாண நிலைமைகளை நேரில் அவதானிப்பதற்கான தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலாளர் திரு. செ. கோடீஸ்வரன் நேற்று முன்தினம் திருகோணமலை சென்றுள்ளார்.

(வண்ணை நிரு.)

# உயிருக்காகப் போராடிய யானைக்குட்டி மீட்கப்பட்டது

## கிணற்றுள் தவறிவிழுந்ததாம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கிளிநொச்சிக் கோழிப்பண்ணைக்கு அருகிலுள்ள காட்டில் இருக்கும் கிணறு ஒன்றில் தவறி விழுந்த 500 ருத்தல் நிறையுள்ள ஆறு மாத யானைக்குட்டி ஒன்று உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இளம் பறவை இசைப் பார்வையிட்ட... கள் விளையாட்டுக் கழகத்தினரின் உதவியுடன் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். யோகநாதன் இந்த யானைக்குட்டியை மீட்டுள்ளார்.

தபால் தந்தித் தொடர்புகள், வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு செ குமாரசூரியர் உட்படப் பலர்

யானைக் கூட்டத்துடன் வந்த இக்குட்டி யானை, தவறிக் கிணற்றில் விழுந்ததால் பல நாட்கள் உணவில்லாது உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தது. இதனால் பொதுமக்களின் உதவியுடன் உணவு வகைகள் ஊட்டப்பட்டு வருகின்றன.

இக்குட்டி யானையைக் கிணற்றிலிருந்து மீட்பதற்கு

[7-ம் பக்கம் பார்க்க]

# மக்கள்வங்கியின் புதிய கடனுதவித்திட்டம்

கொழும்பு, திங்கள்

குடியேற்றத்திட்ட விவசாயிகளுக்கு துரித கதியிலான விசேட கடனுதவியை மக்கள் வங்கி அளிக்கவிருக்கிறது.

இப்புதிய கடனுதவித்திட்டம் கூட்டுறவு உதவி ஆணையாளர் ஊடாக செயற்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. மக்கள் வங்கி இந்த வகையில் விவசாயிகளுக்கு விதைநெல்லையும், கிருமிநாசினியையும் வழங்கும்.

மக்கள் வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவொன்று அந்தந்த பகுதிகளுக்குச்சென்று பரிசீலனை நடத்தி உதவிவழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## திறந்த வெளியரங்கு

வண்ணார்பண்ணை, திங்கள்

புங்குடுதீவு கிழக்கில் சுமார் 35000 ரூபா செலவில் புதிய திறந்த வெளியரங்கொன்று அமைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாத பிற்பகுதியில் இந்த அரங்கை திறந்து வைப்பதற்கும், இத்திறப்பு விழாவைத் தொடர்ந்து மூன்று தினங்கள் இவ்வரங்கில் கலைநிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

''அம்பலவாணர் திறந்த வெளியரங்கு'' என்ற பெயர் இதற்கு சூட்டப்படவுள்ளது. புங்குடுதீவு மக்களும், அபிமானிகளும் அன்பளிப்பாக கொடுத்த நிதியைக் கொண்டு இந்த அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. (இ)

## இசைவிழா

கல்லியங்காடு, திங்கள்

யாழ் ரஸிக ரஞ்சன சபாவின் 26-வது ஆண்டு இசைவிழா இம்மாதம் 29-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பத்துத்தினங்கள் ரஸிக ரஞ்சன சபா விநாயகர் மண்டபத்தில் தினமும் பிற்பகல் '6-மணி தொடக்கம் இரவு 10-30வரை நடைபெறவிருக்கிறது.

## 99 மைல்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் ஜனுப் கிருமானி ஆவார்.

இந்த வேளையில், ஜனுப் கிருமானி நிதிமோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பாக தாம் வர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார் என்று பூட்டோ அரசாங்க அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (இ)

## சுப்ரீம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டுள்ள இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆலோசனை மத்திய அரசுக்கும், மாநிலங்களுக்கும் இடையில் நெருக்கடி நிலையைத் தோற்றுவிக்குமாதலால் இது பற்றி முடிவு தெரிவிக்கவேண்டியது சுப்ரீம் கோர்ட்டாக இருக்கட்டும் என்று பின்னர் காங்கிரஸ் குழு உறுப்பினர் ஒருவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஒன்பது மாநில காங்கிரஸ் அரசுகளும் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

திரு. சரண்சிங்கின் மேற்படி ஆலோசனை அறநெறிப்படியும், சட்டப்படியும் நியாயமானதே என்று கர்நாடக ஜனதா கட்சித்தலைவர் திரு. குருபரசுவாமி இன்று சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார். (உ)

## விளையாட்டுப் போட்டி

வண்ணார்பண்ணை, திங்கள்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டு விழா இம்மாதம் 22-ம், 23-ம் திகதிகளில் ஊர்காவற்றுறை புனிதஅந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

ஊர்காவற்றுறை பிரிவுஉதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகசுந்தரம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. ஊர்காவற்றுறைப் பிரிவு விளையாட்டதிகாரி திரு. கே. ராஜேந்திரா இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஏழுவிளையாட்டுக் கழகங்கள் இப்போட்டிகளில் கலந்துகொண்டன. (இ)


நெற்பயிரைப் பாதிக்கும் எல்லாப் பூச்சிப் புழுக்களையும் கட்டுப்படுத்த



BAYER

லெபேசிட்




நெற்பயிரில் சந்துக்குத்தி, இலை அரிப்புழுக்கள், மூட்டுப்பூச்சி தத்துக்கிளி உட்பட மற்றும் பூச்சிப்புழுக்களையும், கத்தரிக்காய புடோல் பீக்கு, மா, தோடை உட்பட மற்றும் பயிர்களையும் தாக்கும் பூச்சிப்புழுக்களைக் கட்டுப்படுத்த லெபேசிட் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம லிமிட்டெட்,

400 டீன்ஸ் ரோட் கொழும்பு 10

தபால் பெட்டி 70 டெலிபோன் 93563 96331

ராஜா (யாழ். நகர்)
எஸ். எஸ்.ஆர். - ரங்கராவ்
விஜயகுமாரி
[தினசரி 4 காட்சிகள்]
சாரதா

12-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA)
ஜனத்திரள் நிறைந்த 2-வது வாரம்
Daily at 4-45,7-00&9-30p.m. only
அதிசயம்! ஆனால் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 88!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

வெலிங்டன் (யாழ். நகர்)
முத்துராமன் ஃ சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
விஜயகுமார்—லதா
நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

RIO (Jaffna)
Daily 4 Shows
PERCY'S PROGRESS
Color — (Adults only)

53-வது நாள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - தேவிகா
நடித்த
நீலவானம்
29-4-77 முதல்
புரட்சித் தலைவரின் மகத்தான படைப்பு
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

## டிப்ளோமா...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யக்கூடாது என்றும் தமிழ் மாணவர்களின் புள்ளிகளில் கை வைக்கக்கூடாதென்றும் கூறினாராம்.

தமிழ் மாணவர் புள்ளி அடிப்படையை வைத்து சிங்கள மாணவர்களுக்கு தரப்படுத்தல் செய்தால் தமிழ் மாணவர்களுக்கு பாதகம் ஏற்படாது சிங்கள மாணவருக்கு இதனால் சாதகம் ஏற்படும் என்றும் அவர் கூறினாராம்.

இக்கூட்டத்தில் விரிவுரையாளர் ஒருவர் குறுக்கிட்டு தமிழ் மாணவருக்கு புத்திக்கூர்மைஅதிகமா?என்று கேட்டாராம்.

திரு. சந்திரசேகரம் இதற்குப் பதிலளிக்கையில் தமிழ் மாணவர் தொகை குறைவாக இருப்பதாலும் அனுபவமுள்ள விரிவுரையாளர்கள் இருப்பதாலும் தமிழ் மாணவர்கள் அதிக நூல்கள் படித்திருப்பதாலும் திறமைசாலிகளாக விளங்குவதாகக் கூறினாராம்.

சிங்கள விரிவுரையாளர்கள் நேர்மையாக நடத்திருக்கிறார்களென்றும் அதனால்தான் சிங்களமாணவர் குறைந்த புள்ளி எடுத்திருக்கிறார்களென்றும் சிங்கள விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தாராம்.

நாங்களும் நேர்மையாகவே நடந்துகொண்டோம் என்று திரு. சந்திரசேகரம்கூறினாராம்

சிங்கள மாணவர் புள்ளிகள் அடிப்படையில் தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தல் செய்யவேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது

இக்கூட்டத்தில் சமரசமான முடிவு எடுக்கலாகாதா? என்று தலைவர் கேட்டாராம்.

சுயமரியாதையையும், தன்மானத்தையும் இழந்து சமரசத்தை ஏற்படுத்த தாம் தயாரில்லை என தமிழ் விரிவுரையாளர் திரு. சந்திரசேகரம் தெரிவித்தாராம்.

தீர்மானத்தை வாக்கெடுப்பிற்கு விடுமாறும் திரு. சந்திரசேகரம் கூறினாராம்.

வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது 27 சிங்கள விரிவுரையாளர் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர். 7 தமிழ் விரிவுரையாளர்கள் எதிர்த்து வாக்களித்தனர். தீர்மானம் நிறைவேறியது.

எல்லோரும் கட்டி வளர்த்த இந்தத் துறை தமிழர் ஒத்துழையாமை நிலைமை ஏற்படும் என திரு. சந்திரசேகரம்கூறினாரென்றும் இதனை ஆதரித்து தமிழ் விரிவுரையாளர் திரு.வ. ஆறுமுகம் பேசினாராம்

இதில் குறுக்கிட்ட விரிவுரையாளர் ஒருவர் அரசியல் மேடையில் பேசுவதைப் போல் வெருட்டு விடாதீர் என்றாராம்.

இதனை வாபஸ் பெறுமாறு திரு ஆறுமுகம் கேட்டபோது அவர் மறுத்துவிட்டதால் திரு ஆறுமுகம் வெளிநடப்புச் செய்தார்.

தீர்மானத்தைத் தெரிவித்து 7 தமிழ் விரிவுரையாளரும் கையெழுத்திட்டனர். (க)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
T. M. சௌந்தரராஜன்
அருணகிரி நாதர்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
∴ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∴ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∴ சௌகார் ஜானகி, ∴ சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

# 40 ஆயிரம்மாணவர்களுக்கு தொழில் நுட்பக்கல்வி

## ஆறு வருடங்களில் அரசின் சாதனை

கொழும்பு, திங்கள்

கடந்த 6 வருடங்களில் 40 ஆயிரம் மாணவர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி வழங்கப்பட்டுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 15 தொழில் நுட்பக்கல்லூரிகளிலும் இவர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி வழங்கப்பட்டது.

இவர்களில் பெரும்பாலானோர் இப்போது அரசாங்க திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் பணிபுரிந்து வருகின்றனரென்றும் கல்வியமைச்சு அதிகாரி ஒருவர்தெரிவித்தார். (இ)

# பண்ணை பஸ் விபத்து

## இறந்தவர்களுக்கு நினைவுச்சின்னம்

வண்ணார்பண்ணை, திங்கள்

கடந்த வருடம் நவம்பர் மாதம் 20-ந் திகதி பண்ணைப் பாலத்தில் நடந்த பஸ் விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு நினைவுச்சின்னம் நிறுவப்படவிருக்கிறது.

வேலணை இளம்தமிழர் முன்னேற்றக் கழகத்தினர் அண்மையில் விபத்து நடந்த இடத்திற்கு அருகில் இந்தச் சின்னங்களை நிறுவுவதற்கான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டனர்.

இச்சின்னம் நிறுவும் நோக்கம் பற்றி மேற்படி மன்றத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்,

"அப்பாவித்தனமான முறையில் இந்த விபத்தில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மட்டும் இந்த நினைவுச்சின்னம் நிறுவப்படவில்லை. இப்படி ஒரு பரிதாப விபத்து நடந்தது என்பதை எமது பிற்சந்ததி அறிய மட்டுமல்ல, இது போன்ற பாதைகளில் தரமான பஸ்சேவை நிதானமாக நடைபெற வேண்டும் என்பதையும் இப்பாதையில் செல்லும் வாகனங்கள் நிதானமாக செல்ல இது ஒருசிவப்பு வெளிச்சமாகவும் அமையும் என்றார்.

கடந்த வருடம் நவம்பர் 20-ந் திகதி நடந்த இவ்விபத்தில் க. இரஞ்சிதகுமார் (வேலணை வயது 20) ச. மணிமேகலை (வேலணை வயது 21) தே ஆனந்தராசா (குருநகர் வயது 29) க. கந்தசாமி (துன்னாலை வயது 40) ஆகியோர் பலியானது தெரிந்ததே. (இ)

## இன்று அரை இறுதி போட்டி

யாழ்ப்பாணம், செவ்

ஆவரங்கால் சிவாலய நாடக மன்றத்தின் ஆண்டு விழாவை ஒட்டி நடைபெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரைஇறுதிஆட்டத்தில் இன்று ஆவரங்கால் சர்வோதய கழக கோஷ்டியும் புத்தர் கலட்டி வீனஸ் கழக கோஷ்டியும் மோதுகின்றன.

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டு மைதானத்தில் ஆட்டம் நடைபெறுகின்றது.

(விஸ - நி(இ)

## சாகும்வரை உண்ணா விரதம்

புதுடில்லி, ஏப். 25

இந்திய உள்துறை அமைச்சர் திரு.சரண்சிங்கின்கோரிக்கையை ஏற்று 9 காங்கிரஸ் மாநில அரசுகளும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரிய மாணவத் தலைவர் ஒருவர் இந்தூரில் சாகும்வரை உண்ணா விரதம் இருந்து வருகிறார். (இ)

## ஜனதா...

(3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜனதாகட்சிக்கான அமைப்புத் திட்டம் தயாரிக்கப்படும். புதுடில்லியில் அன்று பிரதமர் மொரார்ஜி தேசாய் தலைமையில், கூட்டம்நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## புதிய கட்சி

பட்னா, ஏப்ரல் 25

பட்னாவில் அகில பாரத சோஷலிஸ்ட் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ)

## உயிருக்காக...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய யானைகள் பல விதமான பிரயத்தனங்கள் செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இக்கிணற்றை யானைகள் தமது துதிக்கையாலும், கால்களாலும் தோண்ட முயன்ற அடையாளங்கள் அங்கு தென்பட்டுள்ளன.

இந்த யானைக்குட்டியைக் கேகாலை மிருக வளர்ப்புப் பகுதிக்கு அனுப்ப யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். (வண்.நி)

## திருப்பணி வேலைகள்

யாழ்ப்பாணம்,செவ்

புத்தூர் ஆவரங்கால் சிவன் கோவில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் இம்மாதம் 28-ம்திகதி ஆரம்பமாகின்றன. (விஸ்—நிரு.இ)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனிஞாயிறு2-306-30 9-30
ஜெமினி — சாவித்திரி
கொஞ்சும் சலங்கை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30 7-00, 9-30
THE LIGHT AT THE EDGE OF THE WORLD

## நால்வர் கைது

வேலணை, திங்கள்

டைனமைற் வெடிவைத்து கடலில் மீன்பிடித்ததாக நால்வரை ஊர்காவற்றுறைப் பொலிசார் கைது செய்தனர்.

வேலணை புங்குடுதீவு பாலத்தடியில் டைனமைற் வெடி வைத்து மீன்பிடித்துக் கொண்டிருந்த இவர்களை ஊர்காவற்றுறை பொலிசைச் சேர்ந்த சார்ஜன் சன்முகராசா தலைமையில் சென்ற பொலிசார் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிபதிமுன் ஆஜர் செய்தனர்.

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி' கொட்டடி, கரையூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த கே.வெற்றி, வேலாயுதம், ஆர்.ரஞ்சன், எஸ்.தயாளன், எம்.ராசு ஆகியோரை இம்மாதம் 26-ம் திகதி மீண்டும் கோர்ட்டில் ஆஜராகுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.(இ)

ஈழநாடு
The EELANADU

# எம்.பீ. பதவியைவிட 'தனிநாடு' இலட்சியம் பெரிது

## திரளான மக்கள் மத்தியில் தங்கத்துரை

திருகோணமலை, திங்கள் நேற்று கொழும்பில் இருந்து திருகோணமலை வந்த மூதூர் எம். பி. திரு. ஏ. தங்கத்துரைக்கு பெருந்திரளான மக்கள் திரண்டுநின்று திருகோணமலை ரயில்நிலையத்தில் வரவேற்பளித்தனர்.

பிரதான வீதி ஊடாக ஊர்வலமாக அவர் அழைத்துவரப்பட்டபோது 'திருமலை வேட்பாளர் முடிவை நியமனக் குழுவே மாற்று' 'தனிநபருக்காகஇனத்தைப் பலியிடாதே' என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இவ்வேளை உரையாற்றிய திரு. தங்கத்துரை எம். பி., 'திருமலைநியமனம் அந்தஸ்தை அடிப்படையாக வைத்து வழங்கப்பட்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி நியமனக் குழுவுக்குள் பிரபுத்துவ ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது வருத்தத்திற்குரியது' என்று கூறினார்.

ஊர்வலத்தின்போது திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக எழுப்பப்பட்ட சில கோஷங்களுக்கு அவர் கண்டனம் தெரிவித்தார்.

திரு. தங்கத்துரையை திருமலையில் சுயேச்சையாக போட்டியிடுமாறு அவரது ஆதரவாளர்கள் வற்புறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

எம். பி. பதவியைப் பார்க்கிலும் தனிநாடு கொள்கை நிறைவேறவேண்டும் என்பதில் தான் தமக்கு ஆர்வம் மிக உண்டென்று திரு. தங்கத்துரை ஒரு கட்டத்தில் குறிப்பிட்டார்.

கூட்டணி அபேட்சகர்கள் நியமனம், சாதாரண மக்களுக்கும் பிரபுத்துவ சமுதாயத்திற்கும் இடையில் நடக்கும் ஒருபோராட்டம். வேட்பாளர் நியமனம் குறித்து நாம் எவரும் கலவரமடையக்கூடாது வெள்ளிக்கிழமைவரை பொறுத்திருந்து தீவிரஆலோசனையின் பின் ஒரு முடிவுக்கு வருவோம் என்றும் திரு. தங்கத்துரை தமது ஆதரவாளர்களிடம்தெரிவித்தாராம்.

திருமலைக்கு திரு. தங்கத்துரை நியமிக்கப்படாததால் திருமலை, மூதூர் பகுதிகளில் இளைஞர் பேரவை, த. வி. கூ. கிளைகள் சில கலைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (உ-இ)

### சீனசார்பு மேதின ஊர்வலத்தில்

# கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு இடமில்லை!

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலுள்ள (சீன சார்பு) கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான தொழிற்சங்கங்கள் நடாத்தும் மேதின ஊர்வலத்தில் உழவு யந்திரங்கள், மாட்டுவண்டிகள், சைக்கிள் வண்டிகள் போன்ற வாகனங்கள் கலந்துகொள்வதை அனுமதிப்பதில்லையென்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாதெனவும் மேதினக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

இந்த மேதினக் கமிட்டியின் சார்பில் அதன் அமைப்பாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேதினம் ஒரு புரட்சிகரமான போராட்ட தினமாகும் என்றும் அத்தினத்தை ஒரு கேளிக்கை நிகழ்ச்சியாக்குவதற்கு நாம் உடந்தையாக இருக்கமுடியாது என்றும் அதற்குப்பதிலாக எமது ஊர்வலம் சக்திமிக்கதாக ஆர்ப்பாட்ட ஊர்வலமாக அமையுமென்றும் கூறியுள்ளார்.

# கழிக்கப்பட்ட சேமலாபநிதி அரசு ஊழியர் பெறுவர்

கொழும்பு, திங்கள்

72-ம் ஆண்டுக்குப்பின் அரசாங்கசேவையில் சேர்க்கப்பட்ட ஊழியர்களின் சேமலாபநிதியை அவர்களிடம் திருப்திவழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 57 ஆயிரம் ஊழியர்களுக்கு 1 கோடி 80லட்சம் ரூபா வழங்கப்படும்.

ஐக்கிய முன்னணி அரசின் வரவுசெலவுத் திட்டத்திற்கமைய 72-ம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பள முறை நிறுத்தப்பட்டு சேமலாபநிதித் திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

பின்னர் கடந்த வருடம் ஏப்ரலில் சேமலாப நிதித் திட்டமுறை நீக்கப்பட்டு மீண்டும் பென்ஷன் திட்டம் அமுல் செய்யப்பட்டது தெரிந்ததே.

இக்காலப்பகுதியில் அரசாங்க ஊழியர்களிடமிருந்து கழிக்கப்பட்ட சேமலாப நிதியையே திருப்பிக்கொடுக்க அரசு இப்போது தீர்மானித்துள்ளது.

இவர்களில் ஆண் ஊழியர்களுக்கு சேமலாப நிதியில் விதவைகள், அனாதைகள் பென்ஷனுக்கான பணம் கழிக்கப்பட்டபின்னர் மிகுதிப்பணம் வழங்கப்படும்.

பெண்களுக்கு முழுத் தொகையும் வழங்கப்படும். (இ)

## சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 06 J 0124 | 10 J 0152 |
| 15 J 0164 | 05 K 0761 |
| 17 K 0119 | 18 K 0688 |
| 22 K 0486 | 39 K 0274 |
| 12 L 0102 | 27 L 0119 |
| 42 L 0933 | 21 M 521 |
| 33 M 0966 | 01 N 0486 |
| 36 N 0703 | 37 N 0467 |
| 03 O 0453 | 13 O 0769 |
| 13 O 0855 | 20 O 0223 |
| 23 O 0853 | 11 P 0504 |
| 18 P 0022 | 22 P 0288 |
| 25 P 0492 | 28 P 0699 |
| 50 P 0776 | 18 Q 0782 |
| 37 Q 0220 | 01 R 0313 |
| 05 R 0780 | 19 R 0274 |
| 19 R 0780 | 20 R 0331 |
| 21 R 0538 | 22 R 0837 |
| 30 R 0623 | 32 R 0597 |
| 17 S 0293 | 10 S 0023 |
| 32 S 0222 | 41 S 0557 |
| 44 S 0599 | 49 S 0788 |
| 01 T 0985 | 09 T 0037 |
| 27 T 0195 | 29 T 0288 |
| 38 T 0450 | 01 U 0167 |
| 06 U 0677 | 10 U 0388 |
| 38 U 0026 | 07 V 0202 |
| 17 V 0285 | 21 V 0410 |
| 30 V 0671 | 31 W 0596 |
| 04 W 0353 | 27 X 0048 |
| 41 X 0479 | 43 X 0131 |
| 43 X 0624 | 19 Z 0230 |
| 45 Z 0185 | 50 Z 0862 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. துரைரத்தினம் இயங்கவில்லையென்றும் இயங்காத பிரதிநிதிஇயக்கத்துக்கு வேண்டாம் போன்ற பலசுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன

இந்த இளைஞர்கள் சமர்ப்பித்த மகஜரில் திரு. துரைரத்தினத்துக்குக் கொடுக்கப்பட்ட மோட்டார் கார் பற்றியும் கேட்கப்பட்டிருந்தது.

திரு. துரைரத்தினத்தைத் தெரிவு செய்ததைப் புனராலோசனை செய்து பருத்தித்துறைத்தொகுதியைச் சேர்ந்த ஒருவரையே வேட்பாளராக நியமிக்கும்படியும் மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைத் தொகுதி பிரிக்கப்பட்டதால் திரு. துரைரத்தினம் வெற்றிபெறும் வாய்ப்பில்லையென்றும் சென்ற தேர்தல்களிலேயே அவர் பெற்ற வாக்குகள் குறைந்து வந்துள்ளதென்றும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறைத்தொகுதிக்கு திரு. துரைரத்தினத்தை அபேட்சகராக நியமித்ததை ஆட்சேபித்து சுமார் 25 இளைஞர்கள் நேற்றுக்காலை 9 மணியளவில் தமிழர்விடுதலைக்கூட்டணிக் காரியாலயத் திற்கு முன்பாக சத்தியாக்கிரகம் செய்தனர். கையில் எதிர்ப்புச் சுலோகங்களைக்கொண்ட அட்டைகளை ஏந்தியவாறு நடந்து வந்த இவ்விளைஞர்கள் கூட்டணிக்காரியாலயவாசலில் தமது அட்டைகளைஉயர்த்திப்பிடித்த வண்ணம் உட்கார்ந்திருந்தனர். இவர்களுக்கு தலைமை தாங்கிவந்த சிவா. கிருஷ்ணமூர்த்தியும், காந்திதாஸனும் காரியாலயத்திலிருந்த பொன். சத்தியசீலன், வண்ணை ஆனந்தன் ஆகியோரிடம் தமது கோரிக்கையை எடுத்துரைத்தனர். பருத்தித்துறைத்தொகுதியில் மக்களின் கோரிக்கைக்குச் செவிசாய்க்காமல் சர்வாதிகாரமுறையில் தொகுதிநிர்ணயக்குழு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொள்ளாத ஒருவரை நியமிப்பது தவறு என்றும் கூறினார்கள். இச்சமயம் அங்குவந்தசட்டத்தரணி திரு. மு. ஆலாலசுந்தரம் இளைஞர்களது கோரிக்கையைக் கேட்டறிந்ததோடு அவர்களது கையெழுத்துக்களைப் பெற்றுக்கொண்டு இதுபற்றித் தான் மேலிடத்திற்கு தெரிவிப்பதாகவும் அமைதியாக இங்கிருந்து போகும்படியும் கூறினார். பின்னர் இவ்விளைஞர்கள் அமைதியாக அங்கிருந்து வெளியேறினார்கள். (கா.நி)

## நல்லூர்த்—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகராக நிறுத்தவேண்டுமென்றும் திரு. சிவசிதம்பரத்தை சாவகச்சேரித் தொகுதியில் நிறுத்தலாமென்றும் வாலிபர்கள் கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளதாகவும் திரு. ஆலாலசுந்தரத்தையே நல்லூர் தொகுதியில் நிறுத்த வேண்டுமென்று கோரி இளைஞர்கள் சத்தியாக்கிரகம் நடத்துவதற்கும் திட்டமிட்டிருப்பதாகவும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## உடுப்பிட்டியில் மோதிலால்

பொதுத் தேர்தலில் சட்டத்தரணி திரு. து. மோதிலால் நேரு உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடவிருக்கிறார்.

தமிழ்க் காங்கிரஸ்தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டிக்கு வேட்பாளராக நியமிக்கப்படாததைத் தொடர்ந்தே திரு. மோதிலால் நேரு தொகுதியின் பலரின் வேண்டுகோளுக்கிணங்கஇந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரியவருறது.

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 1965ம் ஆண்டுபொதுத் தேர்தலில் பருத்தித்துறைத் தொகுயியில்போட்டியிட்டார் புதிய தொகுதிகள் நிர்ணயத்தின்படி வல்வெட்டித்துறை நகரசபை எல்லை முழுவதும் உடுப்பிட்டித் தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

## நீதிபதி ஞானச்சந்திரன்

முன்னாள் யாழ்ப்பாண நீதிபதியும் தற்போதைய மூதூர் நீதிபதியுமான திரு. கே. ஞானச்சந்திரனை சாவகச்சேரி தொகுதியில் தேர்தலில் நிற்குமாறு கோரி இளைஞர்கள் பலர் ஆயிரக்கணக்கானோரின் கையெழுத்துப் பெற்று மகஜர் ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

இவர்கள் திரு. ஞானச்சந்திரனிடம் சென்று வற்புறுத்தியபோதுதாம் இதுபற்றி இப்போது ஒன்றும் தீர்மானிப்பதற்கில்லையென்று தெரிவித்ததாகத்தெரிகிறது.

## இளைஞர்கள்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

பின் போடப்பட்டுவிடும். ஆகவே இளைஞர்கள் பதவிகளை மட்டும் சிந்திக்கின்ற தலைவர்கள் பின்செல்லாது உண்மையில் தமிழ் ஈழ விடுதலையில் தம்மைப் பிணைத்து முழுநேர ஊழியராகச் செயல் வீரராகக் கடமையாற்ற முன்வரவேண்டும்.

"எம் மத்தியில் இருக்கின்ற சாதி சமயப் பூசல்களை, இடதுசாரி இயக்கங்கள் ஒரு கருவியாகப் பாவித்துத் தமிழினத்தை இரு கூறுகப் பிரிக்கப் பார்க்கின்றன. தமிழினம் இந்நாட்டில் உரிமையுடைய இனமாக மாறினால்தான் தமிழன் இந்நாட்டில் வாழமுடியும் எனவே தமிழ் மக்கள் உட்பூசல்களை மறந்து தமிழினம் விடுதலைபெறுவதற்காகத் தமிழர் கூட்டணியும் தமிழ் இளைஞர் பேரவையும் காட்டும் பாதையில் செல்வதற்குத் தம்மை அர்ப்பணிக்கவேண்டும்."

ஆசிரியர் அ. பொ. செல்லையா, வண்ணை ஆனந்தன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி சின்னத்துரை

நல்லூர் விநாசித்தம்பி சின்னத்துரை காலமானார். இவர் பூரணத்தின் அன்புக்கணவரும், திருமதி நாகம்மா செல்லத்துரையின் தந்தையும், சாலியபுரம் இரத்தினத்தின் சிறியதந்தையும், பெருந்தெருக்கள் திணைக்களம் (HIGHWAYS DePT) இளைப்பாறிய பிரதம கணக்காளர் செல்லத்துரையின் மாமனாரும், இங்கிலாந்து கதிர்காமநாதன் (பொறியியலாளர்) கிரிதரநாதன், தெய்வேந்திரநாதனதும், மாலினி, மதுரை வைத்தியக்கல்லூரி ரவீந்திரநாதனதும் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (26—4—77) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் செம்மணி குடும்பமயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்—விலாசம் 24, யமுனா வீதி. நல்லூர் யாழ்ப்பாணம்.

6020

## மரண அறிவித்தல்

### சபாபதிப்பிள்ளை சண்முகராசா

வேலணை கிழக்கைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை சண்முகராசா காலஞ்சென்று விட்டார். இவர் பெரியபிள்ளையின் அன்புக் கணவரும், இலகுநாதன், தயாநிதி, வாமதேவன், ஸ்ரீநிவாசன், நளாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்) திருமதி சா. கந்தையா ஆகியோரின் சகோதரருமாவர்.

இவரின் பூதவுடல் செவ்வாய்கிழமை மாலை சாட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். 6021

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in SriLanka.